# சகல கலாவல்லி



அமுத
நிலையம்

கி.வா. ஜகந்நாதன்

# சகல கலாவல்லி

கி. வா. ஜகந்நாதன்

விற்பனை உரிமை
அமுத நிலையம் லிமிடெட்
46, இராயப்பேட்டை ஹைரோடு
சென்னை — 600 014

| | | |
|---|---|---|
| Title of the Book | : | SAKALAKALA VALLI |
| Language | : | Tamil |
| Subject | : | Essays |
| Author | : | Late K. V. Jagannathan |
| Right | : | Amudha Nilayam Ltd |
| Date of Edition | : | September 1990 |
| Publisher | : | Amudha Nilayam Ltd<br>46, Royapettah High Road<br>Madras-600 014 |
| Printer | : | Japonica Printing Media<br>Madras-600 014 |
| Paper used | : | Double Crown Mandia 10.5 kg |
| Size | : | 17 × 12 Cms |
| Wrapper Design | : | Manian Selvan |
| Number of copies | : | 1200 |
| Number of Pages | : | 96 |
| Price | : | Rs. 10/- (Rupees Ten only) |
| Binding | : | Paper Back |

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | முன்னுரை | | |
| 1. | வெண்டாமரையும் தண்டாமரையும் | ... | 1 |
| 2. | பாடும் பணி | ... | 10 |
| 3. | கவி மழை | ... | 21 |
| 4. | கல்வியும் கவியும் | ... | 30 |
| 5. | திருவடித் தாமரை | ... | 39 |
| 6. | முத்தமிழ் வேட்கை | ... | 45 |
| 7. | கவிதை அநுபவமும் பயனும் | ... | 52 |
| 8. | மூன்று வரம் | ... | 59 |
| 9. | மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் | ... | 68 |
| 10. | வேண்டுகோள் | ... | 77 |
| | கலைமகள் துதிகள் | ... | 84 |

# முன்னுரை

ஆக்கல், அழித்தல், அளித்தல் என்னும் மூன்று தொழில்களையும் பிரம்ம விஷ்ணு ருத்திரர்கள் செய்கிறார்கள். அந்த மூவரிடத்திலும் சக்திகளாக இருந்து மூன்று தேவியர்கள் அவர்களுக்குத் துணை புரிகிறார்கள். அவர்களுக்குள் படைப்புத் தொழிலை ஆற்றும் பிரமனுக்குத் துணைவியாக இருக்கிறவள் கலைமகள். அவனுடைய நாவிலே இருப்பதனால் அவளை நாமகள் என்றும் சொல்கிறோம். சிவபெருமானையும் பார்வதியையும், திருமாலையும் திருமகளையும் வணங்கி வழிபடுகிறோம். ஆனால் பிரமனையும் கலைமகளையும் சேர்த்து வழிபடுவதில்லை; வாழ்த்துவதில்லை. கலைமகளை மட்டும் வழிபடுகிறோம். நவராத்திரி விழாவின் இறுதியில் சரசுவதி பூஜையை யாவரும் செய்கிறோம். சைவ வைஷ்ணவ பேதமின்றி யாவருமே கலைமகளை வணங்குகிறார்கள். கலைமகளைத் திரிபுரசுந்தரியின் அம்சமென்று தேவியின் பக்தர்கள் வணங்குவார்கள். பௌத்தர்கள் ப்ரக்ஞா பாரமிதை என்றும் மஞ்சுஸ்ரீ யென்றும் போற்றுவார்கள். மணிமேகலையில் கலைமகளைச் சிந்தாதேவி என்று சொல்கிறார் பௌத்தராகிய சீத்தலைச் சாத்தனார்.

சைனர்களும் கலைமகளை வழிபடுவதுண்டு. சீவகசிந்தாமணியில் முதல் இலம்பகமே நாமகள் இலம்பகம். சீவகன் கல்வியில் வல்லவனுனன் என்பதை, 'நாமகள் நலத்தையெல்லாம் நுகர்ந்த'தாகச் சொல்வார் திருத்தக்க தேவர். அவனுக்குக் கல்வி கற்பிக்கப் புகுந்ததை, ''குழைமுக ஞானமென்னும் குமரியைப் புணர்க்க லுற்ருர்'' என்று கூறுகிருர் ஆசிரியர்.

கலைமகளே நாற்பத்தொன்பது புலவர்களாக இருந்து தமிழ்ச்சங்கத்தில் வீற்றிருந்ததாகத் திருவிளையாடற் புராணம் சொல்கிறது. கம்பர் கலைமகளின் அருள் பெற்ற புலவர். ஒட்டக்கூத்தரும் அவள் திருவருளைப் பெற்ருர். அவர் பெயரால் வழங்கும் கூத்தனூரில் கலைமகள் திருக்கோயிலை அவர் நிறுவினர். தாம் பாடிய தக்கயாகப் பரணியில், கூத்தனூரில் அரிசிலாற்றங்கரையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கலைமகளை,

''ஆற்றங் கரைச்சொற்
கிழத்தி வாழியே''

என்று பாடுகிருர்.

கலைமகளின் துதிகளாகச் சில தனிப்பாடல்களும் சில நூல்களில் உள்ள வாழ்த்துக்களும் உள்ளன. சரசுவதி சிந்தனை என்ற பாடல் ஒன்று உண்டு. பாரதியார் கலைமகளைச் சில பாடல்களால் பாடியுள்ளார்.

தனி நூல்களாகக் கலைமகளைப்பற்றி உள்ளவை கம்பர் பாடிய சரசுவதி அந்தாதியும் குமரகுருபர முனிவர் பாடிய சகல கலாவல்லி மாலையும் ஆகும். வேறு நூல்கள் இருந்தனவாகத் தெரிய வில்லை.

இந்த இரண்டு நூல்களிலும் சகலகலா வல்லி மாலை பலராலும் படித்துப் பாராட்டப் பெறுகிறது. அதனை இயற்றியவர் குமரகுருபர முனிவர்; அவர் சைவராக இருந்தாலும் கலைமகளைப் பாடினார். இந்தி மொழியில் வன்மை பெறுவதற்காக இதைப் பாடினார் என்று தெரிகிறது.

கலைமகளைத் துதிக்கும் நூலாக இருந்தாலும், கவியின் பெருமையையும், உணர்ச்சிமிக்க புலவர் வாயிலாக அது வெளிப்படுவதையும், கவிஞர் களின் இயல்பையும் தெரிவிக்கின்றது. கவிதையைப் பற்றி மேல்நாட்டினர் கூறும் பல இலக்கணங்களை இந்த மாலையில் காணலாம்.

இந்த நூலின் பாடல்களைக் கட்டுரை வடிவில் எழுதி, குமரகுருபரர் என்ற பத்திரிகைக்கு வழங்க வேண்டுமென்று திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பி ரான் சுவாமிகள் பணித்தார்கள். அவ்வாறே எழுதி னேன். அந்தக் கட்டுரைகளையே தொகுத்து இந்தப் புத்தக வடிவில் வெளியிடுகிறேன். இதன்பின் கலை மகள் துதியாக உள்ள வேறு பாடல்களைச் சேர்த் திருக்கிறேன்.

இதை எழுதக் காரணமாக இருந்த திருப்பனந் தாள் காசிமடத்துத் தலைவர் அவர்களுக்கும், 'குமரகுருபரர்' என்ற பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் சிரஞ்சீவி ம. வே. பசுபதிக்கும் நன்றியறிவு பாராட்டுகிறேன்.

காந்தமலை
சென்னை-28

கி. வா. ஜகந்நாதன்

# வெண்டாமரையும் தண்டாமரையும்

காசி மடத்தின் மூல ஆசிரியராகிய குமரகுருபரர் காசியில் எழுந்தருளியிருந்தார். அங்கே ஒரு மடத்தை நிறுவ வேண்டுமென்று அவர் எண்ணினார். அப்போது நவாபு ஒருவர் காசியை ஆண்டு கொண்டிருந்தார். மடம் கட்ட வேண்டுமானால் காசியில் இடம் வேண்டும். கங்கைக் கரையில் நல்ல இடத்தில் ஒரு மடம் கட்ட வேண்டுமானால் அதற்கு நவாபின் அனுமதி வேண்டும். எனவே, நேரில் போய் நவாபைப் பார்க்கலாம் என்று குமரகுருபரர் எண்ணினார். சும்மா போய்ப் பார்த்தால் தமக்கு வேண்டியதை அவர் கொடுப்பாரா என்ற ஐயம் எழுந்தது. அதன்மேல் இறைவன் திருவருளை எண்ணி, ஒரு சிங்கத்தைக் கொண்டு வந்து அதன் மேல் ஏறிக்கொண்டு நவாபுக்கு முன்னால் போனார். சாதுவாக அந்த சிங்கம் குமரகுருபரரை ஏற்றிச் சென்றதைக் கண்டு மக்கள் அஞ்சி நடுங்கினார்கள். நவாபும் ஆச்சரிய மடைந்து, “தாங்கள் யார்? என்னிடம் எதற்காக வந்திருக்கிறீர்கள்?” என்று பணிவுடன் கேட்டார். அப்போது குமரகுருபரர், “இங்கே எனக்கு ஒரு மடம் கட்ட வேண்டுமென்று ஆசை. கங்கைக் கரையில் ஒரு நல்ல இடம் வேண்டும். நீங்கள் அப்படி ஒரு நல்ல இடத்தைத் தந்தால் நன்றாக இருக்கும்” என்றார்.

நவாபோ இந்துஸ்தானி பேசுகிறவர். முனிவர் தமிழ் பேசுகிறவர். நவாபோடு தமிழில் பேச முடியாது. அவர் பேசுகின்ற மொழி குமரகுருபரருக்குத் தெரியாது. வேறு யாரையாவது தமக்கு மொழி பெயர்ப்பாளராக வைத்துக் கொண்டால் தம் கருத்தைச் சரியாகச் சொல்வாரா என்று

ஐயம். அவர் இந்தியைக் கற்கவேண்டுமென்று நினைத்தார். தண்ணீர்த் தாகம் அதிகமாக இருக்கும்போது, கிணறு வெட்டி அதிலிருந்து நீரை எடுத்துச் சாப்பிடுவது முடியாத காரியம். அப்படி, இனிமேல் இந்தியைக் கற்றுக்கொண்டு, அதில் பேசுவதற்குப் பழகி, அப்புறம் நவாபுடன் பேசுவது என்பது நடக்கிற காரியமா?

அப்போது முனிவர் எல்லாக் கலைகளுக்கும் நாயகியாகிய கலைமகளை எண்ணினார். சகலகலாவல்லி மாலை என்னும் நூலைப் பாடினார். பத்துப் பாடல்களையுடைய அந்த நூல் கலைமகளின் அருளை வேண்டும் துதியாக அமைந்திருந்தது. அவளது அருளால் இந்தியில் அவரால் நன்றாகப் பேச முடிந்தது. நவாபுக்குச் சமமாக இந்தியில் பேச வல்லுநர் ஆனார். இந்தி மொழியிலேயே நவாபுடன் பேசினார். சிங்கத்தின் மேல் அமர்ந்து வந்த ஆற்றலையும், இந்தியில் பேசிய சாமர்த்தியத்தையும் கண்டு நவாபு, "உங்கள் விருப்பம் போல மடம் கட்டிக்கொள்ள இடம் தருகிறேன். எந்த இடத்தில் இடம் வேண்டும்?" என்று கேட்டார். "எந்த இடத்தில் உபய கருடர்கள் வட்டமிடுகின்றனவோ அந்த இடத்தைத் தரவேண்டும்" என்று சொன்னார். அங்கே கேதார கட்டத்தில் ஓரிடத்தில் உபய கருடன்கள் வட்டமிட்டன. அந்த இடத்தை நவாபு குமரகுருபரருக்குத் தந்தார். அந்த இடத்தில் முனிவர் மடம் கட்டிக்கொண்டு வாழ்ந்தார். அங்கே புராணசாலை என்ற ஒன்றை அமைத்துக் கொண்டு புராணங்களைப் பற்றிய சொற்பொழிவு ஆற்றினார். அந்த மடம் இன்றைக்கும் கேதார கட்டத்தில் குமார சுவாமி மடம் என்ற பெயரோடு விளங்குகிறது.

நவாபுடன் பேசுவதற்கு வல்லமை பெறவேண்டுமென்று எண்ணிய முனிவர் பாடியது ச க ல க லா வ ல் லி மாலை. கலைமகள் சிறப்பையும், தத்துவத்தையும் பற்றி அந்த நூல் மிக நன்றாக விளக்குகிறது. இனி அந்த நூலின் பொருட் சிறப்பைப் பார்க்கலாம்.

கலைமகள் வெண்டாமரையில் வீற்றிருக்கிறாள். நம்முடைய சமயத்தில் கடவுளைப்பற்றிய வருணனைகளுக்கெல்லாம் உள்ளுறை உண்டு. கடவுள் வடிவம், அவர் ஏறும் வாகனம், அவர் இருக்கும் கோயில் ஆகிய எல்லாம் சிற்சில குறிப்புகளைக் கொண்டுள்ளன. இந்தக் குறியீடுகளை "ஸிம்பாலிசம்" (Symbolism) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அறிவு அதிகமாக அதிகமாகக் குறியீடுகளே அந்த அறிவைக் காட்டும் வெளியீடுகளாக இருக்கும். இன்றைய கணிதத்திலும், விஞ்ஞானத்திலும் மேலே போகப் போகக் குறியீடுகள் மிகுதியாக இருப்பதைக் காணலாம்.

முதல் வகுப்பில் படிக்கும் மாணாக்கன் ஒன்று முதல் ஐம்பது வரை எண்ணுகிறான். மூன்றாவது வகுப்பில் படிக்கிற மாணாக்கன் கூட்டல், கழித்தல் ஆகியவற்றைப் போடுகிறான். முதல் வகுப்பில் படிக்கிற மாணவன் ஒரு நாள் மூன்றாவது வகுப்புக்குப் போகிறான். கரும்பலகையில் ஆசிரியர் 4—2 = 2 என்று எழுதியிருக்கிறார். நாலிலிருந்து இரண்டைக் கழித்தால் இரண்டு என்று மூன்றாவது வகுப்பு மாணவன் அதைப் படிக்கிறான். முதல் வகுப்புப் பையனைப் பார்த்து அது என்ன என்று கேட்டால், நாலு, ஒரு கோடு, இரண்டு, இரண்டு கோடு, இரண்டு என்று படிப்பான். இங்கே ஒரு கோடு, இரண்டு கோடு என்பன முறையே ஒன்றிலிருந்து ஒன்றைக் கழிப்பதற்கும் மிச்சம் இன்னது என்பதற்கும் உரிய குறியீடுகளாக வந்துள்ளன. அவை வெறும் கோடுகள் அல்ல. சாமானியக் கணக்கிலேயே மேலே போகப் போக இப்படிக் குறியீடுகள் இருப்பதைக் காணலாம். நம்முடைய சமயத்திலும் இப்படிப் பல குறியீடுகள் இருக்கின்றன. கோயில்களும், விக்கிரகங்களும் இத்தகைய குறியீடுகளே.

"குறிகளும்அடை யாளமும் கோயிலும்
நெறிகளும்அவர் நின்றதோர் நீர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்உமக் கென்கொல் புகாததே"

என்று அப்பர் சுவாமிகள் சொல்கிறார்.

கலைமகள் வெண்டாமரையில் வீற்றிருக்கிறாள் என்று புராணம் சொல்கிறது. வெள்ளைத் தாமரை நல்ல உள்ளத்தைக் குறிக்கும். பொதுவாக நம்முடைய உள்ளத்தை இதய கமலம் என்று சொல்வார்கள். உடம்பிலுள்ள தசைப் பிண்டமாகிய இதயம், தலைகீழாகத் தொங்கும் தாமரை மொட்டுப் போல இருப்பது. ஆனால் உணர்ச்சி நிறைந்த உள்ளமாகிய இதயமோ தாமரை மலரைப் போல இருப்பது; அதை இதய கமலம் என்று சொல்கிறார்கள்.

''மலர்மிசை ஏகினான்''

என்ற குறளுக்குப் பொருள் சொல்ல வந்த பரிமேலழகர், "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின், ஏகினான் என இறந்த காலத்தால் கூறினார்" என்று எழுதினார். ஆகையால் தாமரை என்பது உள்ளத்தைக் குறிப்பது.

தாமரையில் வெண்டாமரை, செந்தாமரை என்று இரண்டு வகை உண்டு. கலைமகள் எழுந்தருளியிருப்பது வெண்டாமரை. வெள்ளை தூய்மைக்கு அடையாளம். தாமரையில் நல்ல தண்மை இருக்கிறது; தூய்மை இருக்கிறது. நம்முடைய உள்ளம் எந்த விதமான மாசுமறுவும் அற்றுத் தூய்மையாக இருந்தால் அதன்மேல் கலைமகள் எழுந்தருள்வாள்.

தாமரை தண்மை உடையது. தண்மைக்குத்தான் ஈரம் என்று பெயர். ஈரம் என்பது அன்பைக் குறிக்கும்.

''ஈர அன்பினர் யாதும் குறைவிலார்''

என்பது பெரிய புராணம். தண்மையை உடைய தாமரையில் மணம் இருக்கிறது. அந்த மணந்தான் ஞானம். உண்மையை உணர்வதற்குரிய அறிவு அது. தாமரையில் விரிவு இருக்கிறது. அது சுருக்கம் இல்லாத உள்ளத்தைக் குறிப்பது. அதாவது, குறிப்பிட்ட ஒன்றை மாத்திரம் பார்த்து, அதனிடத்தில் மட்டும் பற்று வைக்கும் தன்மையின்றி விரிந்து

நிற்பது. நுட்பமாகப் பார்ப்பது கூரிய தன்மை; விரிவாகப் பார்ப்பது அகலமாகிய தன்மை.

"அஃகி அகன்ற அறிவென்னும்"

என்பது குறள். அறிவுக்குக் கூர்மையும் வேண்டும்; அகலமும் வேண்டும். கூர்மையும், அகலமும் இருந்தால் ஆழமாகப் பல நூல்களை ஆராயும் அறிவு கிடைக்கும்.

உள்ளம் பரந்து இருக்க வேண்டும். பரந்த மனோபாவம் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். தாமரை மலர் விரிந்து இருப்பது, தண்மையாக இருப்பது, வெண்மையாக இருப்பது, மணம் பொருந்தியிருப்பது. அதுபோல நம் உள்ளம் விரிந்த கொள்கையுடன் இருக்க வேண்டும். அன்பாகிய ஈரமும், அறிவாகிய மணமும் உடையதாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் கலைமகள் அங்கே இருப்பாள். சகல கலைகளின் அறிவும், ஞானமும் அந்த உள்ளத்தில் இருக்கும்.

கலைமகள் திருவருளைப் பெற்ற பலருள்ளும் கவிஞர்கள் மிகச் சிறந்தவர்கள். அவர்கள் உள்ளம் கற்பனையால் விரிந்து கிடப்பது. விருப்பு வெறுப்பு இல்லாமலிருப்பதால் வெண்மையை உடையது. சுவரில் சித்திரம் தீட்ட வேண்டுமென்றால் வெள்ளை அடிப்பார்கள். அப்போதுதான் தீட்டுகின்ற சித்திரம் அழகாக அமையும்; நல்ல காவியத்தை உள்ளத்தில் தீட்ட வேண்டுமானால் அந்த உள்ளம் விருப்பு வெறுப்பு இல்லாமல் தூயதாகவும், தண்மையாகவும் இருக்க வேண்டும். கற்பனை செய்கின்ற உள்ளம் அத்தகையது. அதில் பரிவு இருக்க வேண்டும். அதுதான் ஈரம். பெரிய கவிஞர்களுடைய உள்ளம் விரிவும், பரிவும் உடையது; விருப்பு வெறுப்பு அற்றது; அறிவு சிறந்தது. இவைகள் எல்லாம் இருந்தால் அங்கே கற்பனைகளும், கருத்தும் நிரம்பிக் கிடக்கும். அதாவது கலைமகள் திருவருள் சித்திக்கும்.

இவற்றையெல்லாம் எண்ணியே கலைமகள் வெண்டா மரையில் வீற்றிருக்கிறாள் என்று குறிப்பாக அமைத்தார்கள்.

வெள்ளை என்பதற்கு மாசுமறுவற்ற நிலை என்பது ஒரு பொருள். ஒன்றுமில்லாத சூனியம் என்பதும் ஒரு பொருள். வெள்ளை அறிவு என்று சொன்னால் அறிவு இன்மையைக் குறிக்கும்.

குமரகுருபரர் கலைமகளைப் பாடத் தொடங்குகிறார். "எம்பெருமாட்டியே, நீ வெள்ளைத் தாமரையில் வீற்றிருக் கிறாய். அதோடு என் உள்ளத் தாமரையிலும் வீற்றிருக்கக் கூடாதா?" என்று கேட்கிறார்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கஎன்
வெள்ளை உள்ளத் தண்டா மரைக்குத் தகாதுகொலோ?

என்று பாடுகிறார். 'உன்னுடைய திருவடியைத் தாங்கு வதற்கு வெள்ளைத் தாமரைக்குப் பாக்கியம் கிடைத்தது போல என்னுடைய உள்ளமாகிய வெள்ளைத் தாமரைக்கும் கிடைக்கக் கூடாதா?' என்கிறார்.

இங்கே வெள்ளை உள்ளம் என்பதற்கு, அறிவு ஒன்றும் இல்லாத சூனிய உள்ளம் என்று பொருள் கொள்ள வேண்டும். தண்மை என்பதற்கு இழிவு என்று பொருள். தண்டாமரை - இழிந்த தாமரை. 'ஒன்றும் அறியாத சூனியம் ஆகிய இழிந்த தாமரையைப் போன்ற உள்ளத்தில் உன் பாதம் தங்காதா? என் உள்ளத்தில் உன் திருவடி படாதா? என் உள்ளத்தில் வந்து இருக்கக்கூடாதா?' என்று வேண்டுகிறார்.

பிறகு கலைமகளின் பெருமையைச் சொல்கிறார். அதை அழகாக எடுத்துக் கூறுகிறார்.

உலகத்தில் ஆக்கும் செயலைப் பிரமன் செய்கிறான். காக்கும் செயலைத் திருமால் ஏற்றிருக்கிறான். சங்காரம் செய்யும் தொழிலை ருத்திரன் ஏற்றுக் கொண்டிருக்கிறான்.

இந்த மூவர்களில் பிரமன் தேவியாக இருப்பவள் சகலகலா வல்லி. பிரமன் நாவில் அவள் குடிகொண்டிருக்கிறாள். பிரமன் கலைவல்லாளன் என்பதையே அது காட்டும். பிரமன் சிருஷ்டி கர்த்தா. உலகை அவன் புதிது புதிதாகப் படைத்துக்கொண்டே இருக்கிறான். படைப்பாற்றலுக்குக் கலைமகளின் திருவருள் வேண்டும்.

பிரமன் நாவில் இருக்கின்ற கலைமகளின் தன்மையைச் சொல்ல வருகிறார். நயமான ஒரு கற்பனையை ஆளுகிறார். ஏழு உலகங்களையும் காப்பாற்றுகிற திருமால் அதனை உண்கிறானும். எல்லாவற்றையும் தன் வயிற்றுள் அடக்குவதை, உண்டான் என்று சொன்னார். அதிகமாகச் சாப்பிட்டவனுக்கு உறக்கம் வந்துவிடும். அதுபோல் உலகம் ஏழையும் உண்ட திருமால் நாகப்பாம்பில் படுத்து உறங்குகிறான்.

எல்லா உலகத்தையும் சங்காரம் செய்கிறவன் ருத்திரன். அப்படிச் சங்காரம் செய்த பிறகு அவன் பித்தனைப் போலத் திரிகிறான். சங்கார மூர்த்தியாகிய சிவபெருமான் பித்தனைப்போலக் கையில் கபாலம் எடுத்துக்கொண்டு பிச்சையேந்தித் திரிகிறான். ஏழு உலகத்தையும் காப்பவன் சுகமாக உண்டு உறங்குகிறான். உலகத்தை அழித்தவன் பித்துப்பிடித்து அலைகிறான். இனிமேல் உலகத்தைப் படைக்க வேண்டும். இந்த இரண்டு பேர்களுக்கும் அதைப்பற்றிக் கவலையில்லை.

பாதுகாப்பவன் குறட்டை விட்டுத் தூங்குகிறான். மற்றவன் அழித்து விட்டு ஊரைச் சுற்றித் திரிகிறான். மறுபடியும் பிரபஞ்சத்தை உண்டாக்க வேண்டுமென்ற கவலை அவர்களுக்கு இல்லை. பிரமனுக்கு அந்தத் தலைச்சுமை இருக்கிறது. அவன் எல்லாவற்றையும் படைக்க வேண்டும். அப்படிப் படைக்கும்போது சலிப்பு ஏற்படும் அல்லவா? ஏதாவது புத்தகம் எழுதுகிறவர்கள் நடுநடுவே சிற்றுண்டியை உண்டு எழுதுவார்கள். சலிப்பைப் போக்கிக்கொள்ள நடுநடுவே காபி சாப்பிட்டுக்கொண்டு எழுதுவதும் உண்டு. இங்கே

பிரமன் மறுபடியும் எல்லாவற்றையும் படைக்கத் தொடங்கு கிருன். அடிக்கடி கரும்பைக் கடித்துக்கொண்டு வேக்கத்தை மேற்கொள்கிருன். அப்படிக் கடித்துச் சுவை பார்ப்பதற் குரிய கரும்பாகச் சகலகலாவல்லி இருக்கிருளாம். இப்படி ஒரு கற்பனை பண்ணி, அதனைச் சொல்கிருர் குமரகுருபரர்.

உண்டான் உறங்க ஒழிந்தான்பித்
தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே,
சகல கலாவல்லியே.

சுவைகொள் கரும்பு - கடித்துப் பார்க்கும் கரும்பு; என்பது இன்பத்தை நுகரும் மனைவி என்று பொருள்படும். மனைவி யோடு சேர்ந்திருப்பவனுக்குச் செய்கின்ற தொழில் நன்ருக முடியும். அவள் அவனோடு அவன் செய்யும் தொழிலுக்குத் துணையாக இருப்பவள். அதனால் மனைவியை வாழ்க்கைத் துணை என்று வள்ளுவர் சொல்கிருர். இங்கே, படைக்கும் கர்த்தாவாகிய பிரமனுக்குப் படைப்புக்குரிய அறிவைத் தந்து, துணையாக இருக்கிருளாம் சகலகலாவல்லி. பிரமன் அடிக்கடி கடித்துக்கொள்ளும் கரும்பாக இருக்கிற நாயகி என்று நயமாகச் சொன்னர்.

இந்தப் பாட்டின் முற்பகுதியில் கலைமகள் தன்மையை யும், பிற்பகுதியில் படைப்பவனுக்கு மனைவியாக இருக்கும் தன்மையையும் சொல்கிருர். விருப்பு வெறுப்பற்ற உள்ளத் தில், ஞானமும் அன்பும் நிரம்பிய உள்ளத்தில், கலைமகள் வீற்றிருப்பாள் என்பதையும், படைக்கின்றவனுக்கு அறிவு அவசியம் என்ற கருத்தையும் இந்தப் பாடல் விளக்கு கிறது.

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்கஎன் வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ?சகம் ஏழும்அளித்து

உண்டான் உறங்க ஒழித்தாள்பித்
தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே,
சகல கலாவல்லியே !

[வெள்ளை உள்ளம் - அறிவற்ற உள்ளம். அளித்து - பாது காத்து. சகல கலாவல்லி - எல்லாக் கலைகளாகிய மலர்களைக் கொண்ட கொடி போன்றவள்.]

குமரகுருபரர் சிறந்த சைவர்; சிவபெருமானையும், அம்பிகையையும், முருகனையும் பாடியவர். அவர் சகலகலா வல்லி மாலையைப் பாடுகிருர். இதனால் அவரது சமரச ஞானம் வெளிப்படும்.

# பாடும் பணி

தமிழ்ப் புலவர்களில் கலைமகளுடைய அருளைப் பெற்றுப் பாடியவர்கள் சிலர் உண்டு. கம்பர் சரசுவதி அந்தாதி பாடிக் கலைமகளுடைய திருவருளைப் பெற்றார் என்று ஒரு வரலாறு உண்டு. கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டத்தைப் பெற்றவர் அவர். மற்றொரு கவிச்சக்கரவர்த்தி யாகிய ஒட்டக்கூத்தரும் கலைமகள் திருவருளைப் பெற்றவர். அவர் நிறுவிய கலைமகள் கோயில் தமிழ் நாட்டில் அவர் பெயரால் வழங்கும் கூத்தனூரில் இருக்கிறது. அவர் தாம் இயற்றிய தக்கயாகப்பரணியில் அந்தக் கலைமகளை,

"ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே"

என்று வாழ்த்தியிருக்கிறார். குமரகுருபர சுவாமிகளும் கலைமகளைத் துதித்து இந்தி மொழியில் வன்மையும், தமிழில் வாக்கு வளமும் பெற்றார். சகலகலாவல்லி மாலையில் அவர் செய்யும் பிரார்த்தனைகள் அடங்கியிருக்கின்றன. இரண்டா வது பாடலில்,

பாடும் பணியில் பணித்தருள்வாய்

என்று கலைமகளை வேண்டுகிறார்.

கவிதையில் சுவை மிகுதியாக இருந்தால் சிறப்பாக இருக்கும். சொல்லும், பொருளும் மட்டும் அமைந்த அளவில் கவிதை இருந்தால் அதற்குத் தனிச்சிறப்பு இல்லை. நாம் பேசுகிற பேச்சில் சொல் இருக்கிறது; சொல்லுக்குப் பொருள் இருக்கிறது. நம்முடைய கருத்தைத் தெரிவிப்ப தற்கு நாம் பேசுகின்ற பேச்சு வாகனமாகப் பயன்படுகிறது. மொழியினுடைய தோற்றமே அதற்காகத்தான். ஒரு

மனிதன் தன்னுடைய கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிப்பதற்குத் தோன்றியதுதான் மொழி. ஆனால் அந்த அளவில் மொழி நின்றிருந்தால் அது வளம் பெற்றது ஆகாது. இலக்கியச் சிறப்புச் சேரச் சேர மொழி வளம் பெறுகிறது.

பிச்சைக்காரர்களில் இரண்டு வகை உண்டு, இராப் பிச்சைக்காரன், பகல் பிச்சைக்காரன் என்று. இந்த இரண்டு பிச்சைக்காரர்களில் யார் உயர்ந்தவர் என்று கேட்டால், அந்தக் கேள்வி பரிகாசமாகத் தோன்றும். ஆனால் இரண்டு பேர்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கவனித்தால் யார் உயர்ந்தவர் என்று ஒருவாறு தெரியும்.

இந்த நாட்டில் இராப்பிச்சைக்காரனுக்குத் தாய்மார்கள் சோறிடுவது வழக்கம். பகல் பிச்சைக்காரனுக்கு அரிசி போடுவார்கள். சோற்றை வாங்கும் பிச்சைக்காரன் அதை ஒரு வேளைக்கு உண்ணலாம்; மீதி இருந்தால் அடுத்த நாள் பகல் ஒரு வேளைக்கு உண்ணலாம்; மூன்றாவது வேளைக்குப் பயன்படாது. பகல் பிச்சைக்காரன் அரிசி வாங்குகிறான். அந்த அரிசியை இரண்டு மூன்று நாட்களுக்குக்கூட வைத்துக் கொள்ளலாம். பல வேளைக்குப் பயன்படும். எனவே அரிசி பெறுகிற பிச்சைக்காரன் சோற்றைப் பெறுகிற பிச்சைக் காரனைவிட உயர்ந்தவன். இப்படியே வாரந்தோறும் கூலி வாங்குகிறவன், தினந்தோறும் கூலி வாங்குகிறவனைவிட உயர்ந்தவன். மாதந்தோறும் கூலி வாங்குகிறவன், வாரந் தோறும் கூலி வாங்குகிறவனை விட உயர்ந்தவன்; ஓர் ஆண்டுக்கு மொத்தமாக என்று பண்டங்களை வாங்கிச் சேமிக்கிறவன் மாதந்தோறும் சம்பளம் பெறுகிறவர்களை விட உயர்ந்தவன். எல்லோருக்கும் மேலான செல்வர் நிலக்கிழார். நிலத்தை வைத்திருப்பவர்களுக்கு ஆண்டு தோறும் நெல் கிடைக்கும். அதிலிருந்து மாதந்தோறும் அரிசி பெறலாம்; வேண்டிய மற்றப் பொருள்களைப் பெறலாம். வேளைதோறும் சோறு சமைத்துச் சாப்பிடலாம். இவ்வளவுக்கும் மூலமாக நிலம் இருக்கிறது.

அதுபோல் இன்றைக்கு நாம் பேசுகிற பேச்சு, நம் முன்னே இருப்பவர்களுக்குப் பயன்படுமேயன்றி மறுபடியும் பயன்படுவதில்லை. நேற்று என்ன பேசினோம் என்பது இப்போது நினைவில் இருப்பதில்லை. நேற்று என்ன உண்டோம் என்பது பெரும்பாலும் நினைவில் இருப்பதில்லை. அதுபோன்றது இது. சில பேர் பேசும்போது கூட ரசமாகப் பேசுவார்கள். அந்தப் பேச்சில், சில வார்த்தைகள் சில காலத்திற்கு நம் நினைவில் நின்று இருக்கும். கவிஞர்கள் எல்லோரையும் விட மிகச் சிறப்பாக, சுவையாகப் பாடுவார்கள். அவர்கள் பாடுகிற கவிதை பல காலத்திற்கும் நிற்கிறது.

பல காலத்திற்கு ஒன்று நிற்க வேண்டுமானால் அதற்கு இரண்டு வகையான பண்புகள் இருக்க வேண்டும். ஒன்று இனிமை; மற்றொன்று பயன். பல காலம் நின்றிருப்பதனால் மட்டும் பயன் இல்லை. குட்டிச்சுவர் பல காலமாக இருப்பதனால் யாருக்குப் பயன்? எனவே பல காலம் இருப்பதோடு அது பயன் தருவதாகவும் இருக்கவேண்டும்.

பயன் தந்தால் மாத்திரம் போதாது. நயம் இருக்க வேண்டும். பயன் தருகிறவற்றை எல்லாம் யாரும் விரும்பி ஏற்றுக்கொள்வதில்லை. சட்டநூல் மனித வாழ்க்கைக்குப் பயன்படுகிறது. பொழுதுபோக்குவதற்காகச் சட்ட நூலை யாரும் எடுத்துச் செல்லமாட்டார்கள். இலக்கணம் மொழிக்கு இன்றியமையாதது; பயனுடையது; என்றாலும் அதைப் பொழுதுபோக்க யாரும் வாங்கமாட்டார்கள். அதில் நயம் இல்லை. சில பண்டங்கள் நயமாக இருக்கும். பனம்பழம் சுவையுடையது; நயம் உடையது. ஆனால் அதை உண்டால் பித்தம் அதிகமாகும்.

பயனும், நயனும் சேர்ந்த நூலே சிறந்த இலக்கியம் என்று சொல்லவேண்டும். கவிதையைக் கல்லாக் கலை என்று சொல்வார்கள். கவிதையில் இன்பம் இருக்கிறது. மக்களின் பண்பை உயர்த்துவதாக இலக்கியம் அமைவதால் அதனால்

பயன் உண்டாகிறது. நயனும் பயனும் உடையதாக இலக்கியம் அமைகிறது.

பழைய காலத்தில் இலக்கியங்களி எல்லாம் கவிதை வடிவத்தில் இருந்தன. காகிதம் முதலிய வசதிகள் இல்லாத காரணத்தினால் நெஞ்சம் என்னும் ஏட்டில் எழுதிக்கொள்வதற்குச் சாதகமாகக் கவிதைகளைப் பயன்படுத்தினார்கள். சோதிடம், மருத்துவம் முதலியவற்றைக் கூடச் செய்யுளாக எழுதி வைத்தார்கள். செய்யுளாக எழுதினால் மனப்பாடம் செய்ய வசதியாக இருக்கும். ஆகையால் எந்த நூலையும் அந்தக் காலத்தில் செய்யுள் வடிவில் எழுதினார்கள்.

ஆனால் செய்யுள் வேறு; கவிதை வேறு. சுவை நிரம்பியதே கவிதையாகும். அது படிக்கப் படிக்க இன்பம் தரும். ஒரு முறை படித்தால் வரும் இன்பம் படிக்கப் படிக்க மிகுதியாகிக்கொண்டு வரும்.

> "நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
> பண்புடை யாளர் தொடர்பு"

என்பது திருக்குறள்.

> "ஆயுந் தொறும்தொறும் இன்பம் தருந்தமிழ்"

என்பது ஒரு புலவர் வாக்கு.

கற்கண்டு சுவைக்கச் சுவைக்க இன்பம் தருவது போல, இலக்கியம் படிக்கப் படிக்க இன்பத்தை உண்டாக்கும். அந்த இன்பத்தைத் தருவதற்குக் காரணம் என்ன?

சுவையுள்ள பண்டமாகிய லாடு போன்றவை இனிக்கின்றன. அவற்றில் மா, நெய், சர்க்கரை போன்றவை சேர்ந்திருக்கின்றன. அவைகளை எல்லாம் வாங்கித் தின்பண்டம் செய்தால் சுவையாக இருக்கும். ஆனால், கவிதையிலே சொல், பொருள் ஆகிய இரண்டே இருக்கின்றன. நாம் பேசுவதில் சொல்லும் உண்டு; பொருளும் உண்டு. ஆனால் சுவையில்லை. நாம் அவற்றைச் சுவை தரும்படியாக

அமைத்துப் பேசுவது இல்லை. கவிஞர்கள் சொற்சுவையும், பொருட்சுவையும் அமையப் பாடுகிறார்கள்.

கவிதையில் சொல்லின்பம், பொருளின்பம் என்று இரண்டு உண்டு. சொல்லையும், பொருளையும் கொண்டு சுவை தந்து கவிதை இயங்குகிறது. சொற்சுவை என்பது சொல்லின் அழகு; பொருட்சுவை என்பது பொருளினால் வரும் இன்பம். இந்த இரண்டு இன்பங்களையும் சிறப்பான கவிதையில் பார்க்கலாம். சொற்சுவை என்பது குறிப்பிட்ட சொல்லைச் சொல்லும்போது உண்டாகும் சுவை. அந்தச் சொல்லை மாற்றினால் அந்தச் சுவை வராது.

ஓர் ஏழை தட்டு எடுத்து வியாபாரம் பண்ணினான். ஒரு நாளைக்கு நான்கு ரூபாய் வியாபாரம் பண்ணினால் ஒரு ரூபாய் லாபம் கிடைக்கும். அவன் சரியாக வயிற்றுக்குச் சாப்பிடுவதில்லை. கடலையை வாங்கி உண்பான். வாரத்திற்கு ஒரு முறைதான் சோறு உண்பான். ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று முதல் சேர்த்து வந்தான். அவனது பக்கத்து வீட்டுக்காரன் அவனைப் பார்க்கும் போதெல்லாம், "மனிதன் உணவுக்குக் கூடச் செலவழிக்காமல் இப்படிக் காசு சேர்க்கிறானே; கடைசியில் முதலுக்கே மோசம் வந்து விடும்" என்று சொல்வான். வேறொரு பக்கத்து வீட்டுக்காரன், "எவ்வளவு கவனமாகப் பொருள் சேர்க்கிறான்!" என்று பாராட்டுவான். ஒரு சமயம் அந்த வியாபாரி கையில் இரண்டாயிரம் ரூபாய் சேர்ந்திருந்ததால் பெரிய வியாபாரம் செய்யலாம் என்று எண்ணினான். சென்னைக்கு வந்து பல இடங்களைப் பார்த்தான். மூர்மார்க்கெட்டுக்குச் சென்றான். திடீரென்று மடியைத் தடவிப் பார்த்தான். பிளேடு போட்டு நறுக்கி அவனிடம் இருந்த பணத்தை யாரோ எடுத்திருந்தது தெரிந்தது. பணம் போய் விட்டதை அறிந்து 'ஆ' என்றான்; உயிர் போய்விட்டது.

ஊரிலுள்ளவர்களுக்குச் செய்தி போயிற்று. அவனைப் பாராட்டினவன் சொன்னான்; "எப்படித் தம்படி தம்படி

யாகப் பணத்தைச் சேர்த்தான்! காசா லேசா ?'' என்றான். மற்றவனோ, ''வயிற்றுக்குக் கூடச் சாப்பிடாமல் காசைச் சேர்த்தான். இப்போது உயிரே போய்விட்டது. காசாலே, சா'' என்றான். காசாலேசா என்ற நான்கு எழுத்துக்களையே இருவர் பேச்சிலும் பார்க்கிறோம். இந்த நான்கு எழுத்துக்கள் ஒன்று சேரும்போது காசா என்று சொல்லி நிறுத்திப் பிறகு லேசா என்று சொன்னால் பாராட்டும் பொருள் கிடைக்கிறது. ஆனால் காசாலே என்று சொல்லி நிறுத்திப் பிறகு சா என்றால் இழிவு தொனிக்கிறது. நாலு எழுத்துக்களே ஆனாலும் இருவேறு வகையில் வார்த்தைகளைப் பிரித்துச் சொல்லும்போது நேர்மாறான இரண்டு பொருள்கள் கிடைக்கின்றன. இதைச் சிலேடை என்று சொல்வார்கள். இதே வார்த்தைகளுக்குப் பணம் என்பது போன்ற வேறு சொற்களைப் போட்டால் இந்த இன்பம் வராது. வேறு மொழியில் மொழி பெயர்த்தாலும் வராது. இத்தகையவை சொல் இன்பம் தருவன.

பொருட்சுவை என்பது பொருளாலே உண்டாகிற இன்பம். வெறும் கருத்து மட்டுமன்றி, கருத்துக்களைச் சொல்கிற முறையிலும் இன்பம் உண்டாகும். சொற்சுவை உணவுக்குத் தொட்டுக்கொள்ளும் ஊறுகாய் போன்றது; பொருட்சுவை சோறு போன்றது. ஊறுகாய் சிறிதளவே இருக்கவேண்டும். சோற்றுக்குப் பதிலாக ஊறுகாயையே உட்கொண்டால் வயிற்றுக்கடுப்பு நோய் வரும். சிலேடை முதலியவற்றைக் கொண்டு மாத்திரம் கவிதை பாடினால் அது சிறந்த கவிதையாகாது. அங்கங்கே சிறிது இருக்கலாம். கம்பராமாயணத்தில் அப்படிச் சில இடங்களில் சொற்சுவை உள்ள பாடல்களைக் காணலாம். பெரும்பாலும் பொருட் சுவை மிகுந்தனவே உள்ளன.

பொருட்சுவை ஒன்பது வகை. அந்த ஒன்பது சுவைகளும் நம் உள்ளத்திற்கு இன்பத்தைத் தருவன.

''ஊனரசம் ஆறல்லால் உண்டோ ?
செவிகள்உணவு ஆன நவரசம்உண் டாயினும்''

என்று தமிழ்விடு தூதுக்காரர் சொல்கிறார்.

இயல்பான நிகழ்ச்சியில் துன்பம் இருந்தாலும், கவிஞன் அதை இலக்கியமாக்கும்போது இன்பமே உண்டாகும். ஒரு பெண் பிள்ளை மகனை இழந்துவிட்டுப் புலம்புகிறாள். துக்கம் விசாரிக்கப் போகிற நமக்கும் அழுது கொண்டிருக்கிற அவளைப் பார்த்தவுடன் கொஞ்சம் கண்கலக்கம் ஏற்படுகிறது. நம்மை அறியாமல் அழுது விடுவோம்; 'கடவுளே, என்னுடைய பகைவனுக்குக் கூட இத்தகைய துன்பம் வர வேண்டாம்' என்று பிரார்த்திப்போம். ஆனால் ஒரு நாடக மேடையில் குழந்தையை இழந்த தாய் புலம்புகிறாள். அதைப் போய் ஒருவன் பார்க்கிறான். அவன் அதில் ஈடுபட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொள்வான். மறுபடியும் அடுத்த நாள் அதே நாடகத்திற்குக் காசுகொடுத்து டிக்கெட் வாங்கிக்கொண்டு போகிறான். உண்மையாகத் தாய் புலம்புவதைப் பார்த்தபோது கண்ணிலே சோகத்தினாலே கண்ணீர் வந்தது. நாடகம் பார்க்கும்போது வந்த கண்ணீர் சோக ரசத்தாலே வந்தது. சோகம் வேறு; சோகரசம் வேறு. இது ஒரு வகையான இன்பக் கண்ணீர். பார்ப்பதற்கு மிளகாய் போல மிட்டாய்க்காரர் மிட்டாய் பண்ணி வைத்திருக்கிறார். வண்ணம், வடிவம் எல்லாம் மிளகாய் போன்றே இருக்கின்றன. என்றாலும் அதை வாங்கித் தின்னும் போது இனிக்கிறது. காரணம், அது கோவாவினாலே செய்யப் பெற்றது. தோற்றத்திற்கு மிளகாயைப்போல இருந்தாலும் மிளகாயின் காரம் அதில் இராது. எலுமிச்சம்பழம் போலப் பண்ணி வைத்திருந்தாலும் புளிப்பு அதில் இராது. அதே மாதிரி அவல நிகழ்ச்சிகள் இலக்கியத்தில் வரும்போது இன்பமாக இருக்கும். இயல்பாக உள்ள நிகழ்ச்சியில் ஏற்படுகிற உணர்ச்சியை மாற்றி இலக்கியம் இன்பமாக ஆக்கித் தரும். இதையே பொருட்கலை என்கிறோம். பெரிய கவிஞன்

சொற்சுவையைவிடப் பொருட்சுவையே மிகுதியாக இருக்கும்படி கவிதை செய்வான்.

குமரகுருபரர் சகலகலா வல்லியைப் பார்த்து,

பாடும் பணியில் பணித்தருள்வாய்

என்று பாடுகிறார். எதைப் பாடுவது, எப்படிப் பாடுவது என்பதையும் சொல்கிறார். நான்கு வகையான கவிதைகளையும் பாடவேண்டுமென்று கேட்கிறார். தமிழில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்று நான்கு வகையான பாக்கள் உண்டு. அவற்றை நாற்கவி என்று சொல்வார்கள். அன்றியும் வேறு நான்கு வகையாகப் பாடுகின்ற கவிகளும் உண்டு. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகியவை நால் வகைக் கவி. ஆசு கவி என்பது நினைத்தபோதே பாடுவது. மதுர கவி என்பது சொல்லின்பம், பொருள் இன்பம் நிரம்பப் பாடுவது. சித்திர கவி என்பது பல வகையான பந்தங்களை வைத்துப் பாடுவது, வித்தார கவி, காப்பியம். இப்படி நான்கு வகையில் பாடித் தமிழில் இன்பத்தைத் தருவார்கள். குமரகுருபரர் நான்கு கவிகளையும் பாடும் பணியைத் தமக்கு அருள வேண்டுமென்று விரும்புகிறார். நான்கு கவிகளும் தெரிந்தவர்களை நாற்கவிப் புலவர் என்று சொல்வார்கள். அகப்பொருள் இலக்கணத்தை இயற்றிய ஆசிரியருக்கு நாற்கவிராச நம்பி என்று பெயர்.

எல்லாக் கலைகளுக்கும் உரிய தெய்வம் கலைமகள். ஆதலாலே, அந்தக் கலைமகளைப் பார்த்துத் தமக்கு வேண்டியவற்றைச் சொல்லிப் பிரார்த்திக்கிறார் குமரகுருபரர். நான்கு கவிகளையும் பாட வேண்டு மென்று விரும்புகிறார். அந்தக் கவிகள் எப்படி இருக்க வேண்டும்? சுவையுள்ள கவிகளாக இருக்க வேண்டும், பொருட்சுவை, சொற்சுவை இரண்டும் அமைந்துள்ளனவாக இருக்க வேண்டும் என்கிறார். பொதுவாக, சொற்சுவை, பொருட்சுவை என்று சொல்வது முறையாக இருந்தாலும் சொற்சுவையை விடப் பொருட் சுவையே சிறப்பானது என்பதை எடுத்துக்காட்டுவார்

போன்று, பொருட்சுவையை முன்னால் வைத்துப் பின்னால் சொற்சுவையைச் சொல்கிறார்.

*நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்*
*பாடும் பணியில் பணித்தருள்வாய்.*

"இரண்டு வகையான சுவைகளும் பொருந்தும்படி, நான்கு வகையான கவிகளையும் நான் பாடுவதே என் வேலையாக இருக்க வேண்டும். அதற்கு உன் திருவருள் வேண்டும்" என்று கலைமகளைப் பிரார்த்திக்கிறார். பாடும் பணி என்பது, வாழ்நாளில் பாடுவதையே முக்கியமான வேலையாக வைத்துக்கொள்வது.

*"எனக்குத் தொழில்கவிதை"*

என்று பாரதியார் பாடுகிறார். அருணகிரிநாத சுவாமிகளும்,

*"பாடும் பணியே பணியாய் அருள்வாய்"*

என்று பாடுகிறார். அப்படிக் குமரகுருபரரும், 'பாடும் பணியில் பணித்தருள்வாய்' என்று வேண்டுகிறார். அதற்குரிய ஆற்றலைத் தரவேண்டுமென்பது பொருள்.

இதற்குமேல் சகலகலாவல்லியின் பெருமையைச் சொல்கிறார். கலைமகள் தாமரை மலரில் வீற்றிருக்கிறாள். அவளுடைய வடிவம் தங்கத்தைப்போலப் பிரகாசிக்கிறது. கொடி போன்ற மென்மையான வடிவை உடையவள் அவள். கொடியில் தாமரை இருக்கும். இங்கே தாமரையில் கொடி இருக்கிறதாம். பங்கயாசனத்தில் பொற்கொடியைப்போலக் கலைமகள் வீற்றிருக்கிறாள்.

*பங்க யாசனத்தில் கூடும் பசும்பொற் கொடியே!*

என்று விளிக்கிறார்; 'தாமரைப் பூவில் சேர்ந்திருக்கிற பொற்கொடி போன்ற தேவியே' என்று பொருள். கலைமகள் வெண்மை நிறம் உடையவள். பொலிவோடு விளங்குவதனாலே பொற்கொடியே என்று சொன்னார்.

அடுத்ததாக அவளது வடிவத்தைச் சொல்ல வருகிறார். கலைமகள் பொற்கொடி போல மெல்லியளாக இருந்தாலும், அவளுடைய அங்கங்களில் சில மிகச் சிறப்பாகத் தோன்றுகின்றன. பருவ மடந்தையருக்கு நகிலும், கூந்தலும் சிறப்பாக இருக்க வேண்டும். அந்த இரண்டும் ஆண்மக்களுடைய உள்ளத்தைக் கவர்வன. பொற்கொடி போன்ற கலைமகளுக்கு மலை போன்ற நகிலும், காடு போன்ற கூந்தலும் இருக்கின்றன. அந்த இரண்டையும் அவள் சுமந்துகொண்டிருக்கிறாளாம். ஒரு கரும்பானது ஒரு மலையையும், ஒரு காட்டையும் சுமந்துகொண்டிருப்பதுபோலக் கலைமகள் காட்சி அளிக்கிறாள்.

> கனதனக் குன்றும் ஐம்பால்
> காடும் சுமக்கும் கரும்பே !

கனம் - பாரம். ஐம்பால் என்பது கூந்தலைச் சொல்லியது. கருமை, நீட்சி, நெய்ப்பு, குழைவு, நுனி பிரியாமல் இருத்தல் ஆகிய ஐந்து வகை இயல்புடைமையால் கூந்தலுக்கு ஐம்பால் என்று பெயர். கூந்தலை ஐந்து வகையாக முடிப்பதுண்டு. கொண்டை முதலிய ஐந்து வகையாக முடிக்கப்படுவதால் ஐம்பால் என்று பெயர் வந்ததென்றும் சொல்வார்கள். பால் - பகுப்பு.

'குன்றையும், காட்டையும் சுமக்கும் கரும்பே' என்றார்.

> "மதுரம் வாய்மடுக்கும் குழற்கா
> டேந்தும்இள வஞ்சிக்கொடியே"

என்று இந்த ஆசிரியர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழிலும் பாடுவார்.

முதல் பாட்டில் கரும்பைச் சொன்னவர் மீண்டும் கரும்பு என்று இங்கும் சொல்கிறார். சுவையுடைய கவிதையை அருளவேண்டுமென்று சொன்னவர், சுவையுடைய கரும்பாகக் கலைமகளை எண்ணுகிறார்.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய், பங்க யாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே, கனதனக்குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே, சகல கலாவல்லியே.

இதிலிருந்து எல்லா வகையான கவிதைகளையும் பாட வேண்டுமென்ற ஆசை குமரகுருபரருக்கு இருந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர் முதல் முதலாகப் பாடிய கந்தர் கலிவெண்பாவிலும் இந்த வேண்டுகோளை முருகனிடத்தில் விடுக்கிறார்.

"பல்விதமாம்
ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசும் இயல்பல்காப் பியத்தொகையும் — ஓசை
எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து"

என்று செந்திலாண்டவனை வேண்டுகிறார். இங்கும் நான்கு வகையான கவிகளைப் பாடும் திறனைத் தரவேண்டுமென்று அம்முனிவர் கலைமகளைப் பிரார்த்திக்கிறார்.

கங்கைக் கரையில் திருமடத்தை அமைப்பதற்காக, நவாபிடம் சென்று வேண்டுகோள் விடுப்பதற்கு முன், அவனோடு பேசுகின்ற ஆற்றலைப் பெறவேண்டுமென்று பாடினாலும், எல்லாக் காலத்துக்கும் பயன்படுகின்ற புலமையையும் வேண்டுகிறார், இந்த முனிவர்.

பெரியவர்கள் சில காலம் இருக்கும் பயனை மாத்திரம் வேண்டமாட்டார்கள், பல காலம் நிலைத்திருக்கும் பயனையே வேண்டுவார்கள் என்பது இதனால் தெளிவாகிறது. பாடும் பணியை வேண்டிய குமரகுருபர முனிவர் கலைமகள் திருவருளாலும், செந்தில் ஆண்டவனின் திருவருளாலும் அதைச் சிறப்பாக அடைந்தார்.

# கவி மழை

சகல கலா வல்லியை மயிலாக உருவகம் செய்கிறார் குமரகுருபர முனிவர். மயில்தோகையை நீட்டியபடி உலா வினால் அத்தனை அழகாயிராது. அது தன் கலாபத்தை விரித்து ஆடிக் களிக்கும்போது, பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும்.

சகலகலாவல்லி என்ற மயில் ஆடிக் களிக்கிறதாம்.

மயில் மழை பெய்யும் நிலையில் உள்ள மேகத்தைக் கண்டால் தோகையை விரித்து ஆடும். கார்காலத்தில் வானத்தில் மேகம் பரந்து நுண் துளி தூவும்பொழுது அது மிகவும் ஒய்யாரமாகத் தோகையை விரித்து, அப்படியும் இப்படியும் அசைந்து அசைந்து ஆடும்.

பரந்து விரிந்து கிடக்கிறது கடல், எல்லையிறந்து ஆழம் மிக்கு அலைவீசி எறியும் கடல் எவ்வளவு விரிந்து பரந்திருந்தாலும் அதன் நீர் தாகத்தைப் போக்காது. அது உப்புக் கரிக்கும் நீரை உடையது; உவர்க்கடல் என்று சொல்லுவார்கள். யாருக்கும் பயன்படாமல் தம் செல்வத்தைக் குவித்துப் பாதுகாக்கும் உலோபிகளுக்குக் கடலை உவமை கூறுவார்கள், "உவர்க்கடல் அன்ன செல்வரும் உளரே" என்பது பழம் பாட்டு. ஆயினும் அந்தக் கடல் இல்லாவிட்டால் உலகுக்கு மழை இராது. கடலிலுள்ள நீரை முகந்து மேகம் மழை பெய்கிறது, கடலில் உள்ள நீரை அப்படியே மொண்டு கொண்டு வந்து பெய்வதில்லை. கடல் நீரில் உள்ள உப்புத் தன்மையை விட்டு விட்டு நன்னீராக்கி மழையாகப் பெய்கிறது. உப்புநீர் ஆவியாகும்போது உப்புக் கீழே தங்கி விடுகிறது. அந்த ஆவியே

திரண்டு மேகம் ஆகிறது. மேகம் உப்பைக் குறைத்துப் பெய்கிறது என்றும் சொல்வதுண்டு. "தடிந்துஎழிலி தான் நல்கா தாகி விடின்" என்று குறளில் வருகிறது.

அப்படி மழை பெய்ய இருக்கும் மேகத்தைக் கண்டு மயில் ஆடுகிறது.

சகல கலா வல்லியாகிய மயில் எப்படி ஆடுகிறது? இந்த உலகம் மிக விரிந்திருக்கிறது, சரப் பொருள்களும் அசரப் பொருள்களும் நிரம்பியது உலகம்; உயிர்ப் பொருள் களும் உயிரில் பொருள்களுமாகக் கொண்டு பரந்திருக்கிறது. இந்த உலகத்தை நாம் பார்க்கிறோம். கண்ணிலே கண்ட வற்றை அப்படி அப்படியே பார்க்கிறோம்.

புலவர்களும் இந்தப் பிரபஞ்சத்தைப் பார்க்கிறார்கள். அவர்கள் பார்க்கும் பார்வைக்கும் நாம் பார்க்கும் பார்வைக் கும் வேறுபாடு உண்டு.

ஒரு மலர்ச் செடியில் உள்ள மலரை ஒரு குழந்தை பறிக் கிறது. அதைப் பறித்துப் பிய்த்துவிடுகிறது. ஒரு காதலன் பார்த்தால் அதைக் கொய்து தன் காதலிக்குச் சூட்டுகிறான். குழந்தை ஒரு கணம் அதன் அழகைப் பார்த்து அதைக் குலைத்து விடுகிறது. காதலனும் அதன் அழகைப் பார்க் கிறான்; ஆனால் அதைப் பறித்துத் தன் காதலிக்குச் சூட்டி அழகு செய்கிறான். பக்தனோ மலரின் அழகைப் பார்க்கிறான்; பிறகு அதை இறைவனுக்கு அர்ப்பணம் செய்கிறான்.

குழந்தை, மலரின் அழகை நன்றாக அநுபவிப்பதில்லை. காதலனும் பக்தனும் அந்த மலரின் அழகைக் கண்டு அதைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்; மலரைக் கொண்டு வேறு ஒரு செயலைச் செய்கிறார்கள்.

ஒரு கவிஞன் அந்த மலரைப் பார்க்கிறான்; அதன் அழகில் ஈடுபட்டு அதைப் பார்த்துக் கொண்டே யிருப்பான். அதைப் பறிக்க மாட்டான். அதன் நிலையில் அது இருப்

பதையே அவன் பார்த்துப் பார்த்து மகிழ்வான். அதில் இறைவனையே கண்டு அதைப் பறிக்காமல் நோக்குபவர்களும் இருக்கிறார்கள்.

"பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி; அப்
பனிமலர் எடுக்க மனமும். நண்ணேன்"

என்று தாயுமானவர் கூறுகிறார் அல்லவா?

இப்படியே, உலகத்திலுள்ள பொருள்களைக் கவிஞர்கள் பார்த்து அவற்றின் அழகை நுகர்வார்கள். இயற்கையின் எழிலைக் கண்டு களிப்பார்கள். மனித மனத்தின் ஆழத்தை அறிவார்கள். அங்கே புரளும் எண்ண அலைகளைத் தெரிந்து கொள்வார்கள். அவர்கள் வெறும் கண் கொண்டு அவற்றைப் பார்ப்பதில்லை. உணர்ச்சியோடு பார்ப்பார்கள். அறிவுக் கண் கொண்டு பார்த்தால் பண்டங்களின் கூறுபாடுகள் தெரியும். உணர்ச்சிக் கண் கொண்டு பார்த்தால் முழு வடிவங்களின் அழகு தெரியும். உணர்வு விழி கொண்டு பார்க்கிறவர்கள் கவிஞர்கள்.

தாம் பார்த்ததை அவர்கள் கவியாக வடிக்கிறார்கள். கண்டதைக் கண்டபடியே சொல்வதில்லை. அவற்றுள் சாரமானவற்றை எடுத்துச் சொல்வார்கள்.

கவிஞர்கள் இவ்வாறு சொல்வதைப் புலனெறி வழக்கம் என்றும், நாடக வழக்கு என்றும் பழம் புலவர்கள் சொல்வார்கள். இனியனவான பகுதிகளையெல்லாம் திரட்டி ஒன்றாகச் சொல்வதால் நாடக வழக்கு என்று பெயர் பெற்றது. உள்ளம் கொண்டு தெள்ளித் தெளிப்பதனால் புலனெறி வழக்கம் என்றார்கள்.

உள்ளதை உள்ளபடியே சொல்வது கலையாகாது. கடல் நீரை அப்படியே குடத்தில் மொண்டு குடிப்பது போன்றது அது. உள்ளது போலத் தோற்றும்படி சொல்லவேண்டும். ஆங்கிலத்தில் Reality என்றும் Realism என்றும் இரண்டு

சொற்கள் உண்டு. உள்ளதை உள்ளபடியே சொல்வது 'ரியாலிடி'; உள்ளது போலத் தோற்றும்படி சொல்வது 'ரியாலிஸம்' உள்ளதுபோலத் தோற்றும்படி சுவை கமழும் படி சொல்வதற்கு உள்ளமும் அதில் உணர்வும் வேண்டும். வெறும் அறிவு இருந்தால் போதாது. நன்னூலார்,

''உணர்வினில் வல்லோர்
அணி பெறச் செய்வது செய்யுள்''

என்று கவிதைக்கு இலக்கணம் வகுக்கிறார்; உணர்வினில் வல்லவர்கள் இன்னதைச் சொல்ல வேண்டும், இன்னதைச் சொல்லக் கூடாது என்று தெள்ளித் தெளிப்பார்கள்.

ஒரு பாறையை நாம் பார்க்கிறோம். அதில் எந்த அழகை யும் நாம் பார்ப்பதில்லை. ஆனால் ஒரு சிற்பி அதைப் பார்க் கிறான்; அந்தப் பாறையில் ஓர் அழகிய மங்கையின் வடிவத்தைப் பார்க்கிறான்; அந்த மங்கை பாறைக்குள் ஒளிந்திருக்கிறாள். சிற்பக் கலைஞன் அந்தப் பாவையை நமக்குக் காட்ட முனைகிறான், பாவையல்லாத கற்பகுதிகளைச் செதுக்கித் தள்ளுகிறான். திரைக்குள் இருக்கும் உற்சவ மூர்த்தியைத் திரை போட்டிருக்கும்போது நாம் பார்க்க முடியாது; திரைதான் தெரியும். ஆனால் அர்ச்சகர் திரையை விலக்கி விட்டால் மூர்த்தியின் அழகை நாம் காண்கிறோம். திரை கடவுளை மறைத்திருந்தது, அதை ஒதுக்கியதால் கடவுளை நாம் காண முடிகிறது. அதுபோலவே பாறையில் ஒரு கல்திரை மங்கையின் வடிவத்தை மறைத்திருக்கிறது. அர்ச்சகர் திரையை ஒதுக்குவதுபோல, சிற்பி கல் திரையைச் செதுக்குகிறான். செதுக்கிய பிறகு நமக்கு மங்கையின் வடிவழகு தெரிகிறது.

பிரபஞ்சத்தில் நாம் காணும் பொருள்களை ஒரு வகை யான திரை மூடிக்கொண்டிருக்கிறது. அழகை அழகில்லாத பகுதிகள் மறைத்து நிற்கின்றன. கவிஞன் அவற்றைச் சலித்துப் பார்த்து, தெள்ளித் தெளித்து, அழகிய பகுதிகளை

நமக்குக் காட்டுகிறான். அதை அறிந்து நாம் வியப்படைகிறோம்; சுவைக்கிறோம்.

இப்படித் தெள்ளித் தெளிக்கும் உள்ளம் உடையவர்கள் கவிஞர்கள். மேகம் உப்பை விட்டு நன்னீரைப் பொழிவது போலக் கவிஞர்கள் சுவையற்றவற்றை விட்டு விட்டுச் சுவையுள்ளவற்றைத் தெள்ளித் தெளிக்கிறார்கள். அவர்களுடைய பனுவல் சுவை மயமாக இருக்கிறது. அவர்கள் கவிமழையைச் சொரிகிறார்கள். பிரபஞ்சமாகிய கடலில் உள்ள கருத்துக்களையும் காட்சிகளையும் மேகம் போல வேண்டாதவற்றை அகற்றித் தெள்ளித் தெளித்துக் கவிஞர்கள் கவிமழையைச் சொரிகின்றார்கள். ஒரு கவிஞருக்குக் காளமேகம் என்றே பெயர் இருக்கிறதல்லவா?

அப்படிக் கவிஞர் கவிமழை பொழியும்போது சகல கலாவல்லி என்ற மயில் களிக்கூத்தாடுகிறதாம்.

இவ்வாறு அழகு ததும்பப் பாடுகிறார் குமரகுருபர முனிவர்.

உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவி மழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல
கலாவல்லியே!

புலவர்கள் உள்ளத்தால் தெள்ளத் தெளிந்து பொழியும் கவிதையை நன்றாக உணர்ந்து அநுபவிக்க வேண்டுமானால் நமக்கும் உணர்வுடைய உள்ளம் வேண்டும். எல்லாக் கலைக்கும் நாயகியாகிய கலைமகள் அத்தகைய உள்ளம் உள்ளவள் ஆகையால் அந்தக் கவிதையைக் கண்டு களிக்கிறாள்.

உள்ளத் துணர்வினால் படைப்பது கவிதை யாதலின் அதை உளங்கொண்டு நுகர்ந்தால்தான் முழு இனிமையையும் சுவைக்க முடியும்.

"உள்ளத்தால் உண்ணப் படும்தேனே"

என்று தமிழ்க் கவிதையைத் தமிழ்விடு தூது பாடியவர் சொல்கிருர்.

இப்படிக் கவிதை மழை பொழியும் மேகங்களாகிய கவிஞர்களுக்கு அருள் பாலிக்கிறவள் சகலகலாவல்லியே. அவளிடம் குமரகுருபரர் ஒரு விண்ணப்பம் செய்து கொள்கிருர். "நீ கருணை கூர்ந்து வழங்கும் செழுந்தமிழாகிய அமிழ்தத்தை நான் மாந்த வேண்டும். உன் அருளாகிய கடலில் குள்ளக்குளிரக் குளித்து மகிழவேண்டும்" என்கிருர்.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துஉன்
அருட்கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடுங்கொலோ?

என்று ஏங்குகிருர்.

நாமும் தமிழில் பேசுகிருேம். மற்ற மொழி பேசுகிறவர்களிடம், "நாங்கள் தமிழர்கள்" என்று சொல்லிக்கொள்கிருேம். நம்முடைய கருத்தை வெளிப்படுத்த ஒரு கருவியாகத் தமிழ் மொழியை ஆள்கிருேம். இது வெறுந்தமிழ்; இதில் வளப்பம் இல்லை. கவிஞர்கள் தரும் தமிழோ சுவை மிக்க தமிழ்; மொழியின் வளமாகிய சொல்லின்பம் பொருளின்பங்களையுடைய தமிழ். அந்த வளமே செழுமை. அவர்கள் தமிழ் செழுந்தமிழ். நாம் பேசும் தமிழை, நாமும் மறந்து போகிருேம்; கேட்கிறவர்களும் மறந்து போகிருர்கள். ஆனல் கவிஞர்களின் தமிழோ பல காலம் நின்று நயம் தரும் செழுந்தமிழாக இருக்கிறது.

அது மாத்திரம் அன்று, அந்தச் செழுந்தமிழைத் தெள்ளமுது என்று சொல்கிருர் குமரகுருபர முனிவர். சுவையுள்ள பொருள்களில் எல்லாவற்றையும் விஞ்சி நிற்பது அமுது. எந்தப் பொறிக்கு இன்பம் தரும் பொருளாக இருந்தாலும் அதை அமுதம் என்று உவமை காட்டிச் சொல்

கிறோம். உண்ணும் பொருள் சுவையாக இருந்தால் அமிர்தம் என்கிறோம்; ''அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்'' என்று பாடினார் ஔவையார். ''காதமுதம்'' என்று காதுக்கு இனிமை தருவதற்கும் அமுதத்தை உவமையாக்குகிறோம். காட்சிக்கினிய கடவுளை, ''ஆராவமுதன்'' என்று போற்று கிறோம். இவை யாவும் இன்பத்தைத் தருவதை எண்ணி வந்த உவமைகள்.

இதற்கு மேலும் கவிதைக்கும் அமுதத்துக்குமிடையே ஒரு பொதுமை இருக்கிறது.

''அமுதாக நிறைந்த கவிதையிலே உயர்நாடு'' என்று பாரதியார் பாடுகிறார்.

அம்ருதம் என்ற வடமொழிச் சொல்லே அமிர்தம், அமிழ்து, அமுதம், அமுது என்று பல வேறு வடிவங்களை எடுத்தது. அந்தச் சொல்லுக்குச் சாவை நீக்குவது என்று பொருள். அமிழ்தம் தன்னோடு கலந்தவர்களைச் சாவாமல் இருக்கச் செய்யும்.

நல்ல கவிதையும் அப்படித்தான். ''என்றும் இழியா தென் பாட்டு'' என்று ஔவையாரும், ''மாயா மற்றிவர் செய்யும் உடம்பு'' என்று குமரகுருபரரும் பாடுவார்கள். மாயாக் கவிதையில் உள்ள பொருளும் மாய்வதில்லை. கம்பன் கவிதையில் இடம் பெற்றதனால் இராமன் என்றும் அழகு குன்றாமல் இருக்கிறான் என்பது பெரிதன்று. இராவணனும் மாயாமல் தன் உருவைக் காட்டிக் கொண்டு நிற்கிறான். உண்மையான இராவணனை நாம் விரும்ப மாட்டோம். ஆனால் காப்பியத்தில் வரும் இராவணனை நாம் பலகாலும் கண்டு இன்புறுவோம். தேனில் ஊறிய நெல்லிக்காய் துவர்ப்பு மாறி இனிய சுவை கொள்வதுபோல, கவிதையென்னும் அமிழ்தில் ஊறிய பாத்திரங்களும் கருத்துக்களும் சாவாமல் என்றும் நிலவுகின்றன. இந்த வகையிலும் செழுந்தமிழ், தெள்ளமுதை ஒத்திருக்கிறது.

அந்தத் தெள்ளமுதை நிரம்ப நுகரவேண்டும் என்று விரும்பு கிறார் குமரகுருபரர்.

செந்தமிழ்த் தெள்ளமுதை ஆர்வதனால் இறைவன் அருள் கிடைக்கும். உள்ளத்திலுள்ள அறியாமை இருள் போக, உள்ளொளி படரும். அவனருளில் ஆழலாம்.

''சொற்பாவும் பொருள்தெரிந்து
தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை
வாங்கா தானை''

என்று எதிர்மறைவாயிலாக இந்தக் கருத்தைத் திருநாவுக் கரசர் புலப்படுத்துகிறார். செந்தமிழமுதத்தை மாந்தின வர்கள் இறையருளில் குளிப்பார்கள். இதை எண்ணியே சகலகலாவல்லியைப் பார்த்து,

அளிக்கும் செழுந்தமிழ்த்
தெள்ளமு தார்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்குஎன்று
கூடுங்கொலோ

என்று சொல்கிறார்.

கவிதை அருளநுபவத்துக்கு வழிகாட்டுவதென்பது இந்த நாட்டினர் கொள்கை. அருளநுபவத்துக்கு வழி காட்டுவதே சிறந்த கவிதை என்றும் சொல்லலாம்.

உளம்கொண்டு தெள்ளித் தெளிக்கும் புலவோர் தரும் கவிதையாகிய செழுந்தமிழ்த் தெள்ளமுதை ஆர்ந்தால் அன்னையின் அருட்கடலில் குளிக்கலாம்.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துஉன் அருட்கடலில்
குளிக்கும் படிக்குஎன்று கூடுங்கொ
லோஉளம் கொண்டுதெள்ளித்

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே,
சகல கலாவல்லியே!

[அளிக்கும் - நீ வழங்கும். ஆர்ந்து - நுகர்ந்து. குளித்து விட்டு அமுது செய்வது வழக்கம்; இங்கே அமுதார்ந்து குளிக்க வேண்டும் என்றது ஒரு நயம். தெள்ளித்தெளிக்கும் - நல்லனவாகத் தேர்ந்து தெளிந்து கொடுக்கும். பனுவல் - நூல். கலாபம் - தோகை.]

இது சகலகலாவல்லிமாலையில் மூன்றுவது பாட்டு.

# கல்வியும் கவியும்

சீகல கலா வல்லி எல்லாக் கலைகளுக்கும் தலைவி. ''ஆய கலைகள் அறுபத்து நான்கினையும், ஏய உணர்விக்கும் என் அம்மை'' என்று கம்பர் பாடுவார். எல்லா மொழி களுக்கும் அவள் தாய். அவள் அருள் கிடைத்தால் எந்தக் கலையையும் கற்கலாம்; எந்த மொழியையும் பயின்று புலமை பெறலாம். அதனால்தான் குமரகுருபர முனிவர் இந்தி மொழியைக் கற்கும்பொருட்டு அவளைப் பாடினார்.

உலகத்தில் எத்தனையோ மொழிகள் உள்ளன. இந்தப் பாரத நாட்டில்தான் எத்தனை மொழிகளை மக்கள் பேசு கிறார்கள்! இந்த மொழிகளுக்கெல்லாம் ஆதி அந்தம் என்று வரையறுக்கும் கால எல்லைக்குள் அடங்கிய வரலாறுண்டு. எத்தனையோ மொழிகள் தோன்றி மறைந்து போனதும் உண்டு.

இவ்வாறுள்ள பல மொழிகளுக்குள் நீண்ட நெடுங்கால மாக உள்ள மொழிகள் உண்டு. அவற்றில் தோன்றிய சில நூல்களின் பழமையை, இன்ன காலந்தான் என்று திட்ட மாகச் சொல்ல முடியாது. அத்தகைய தொன்மை வாய்ந்த மொழிகள் வடமொழியும் தமிழும். வடமொழி வேதம் எப்போது தோன்றியதென்று வரையறையாகச் சொல்ல முடியவில்லை. அப்படியே பழைய தமிழ் நூலாகிய தொல்காப்பியம் என்று தோன்றியது என்ற ஆராய்ச்சிக்கு உறுதியான முடிவு இன்னும் உண்டாகவில்லை. அப்படி யாரேனும் தெரிந்து சொன்னாலும் அதற்கும் முந்தியதென்று உரைக்கும் அகத்தியத்தின் காலத்தை வரையறுக்க முடியாது.

இவ்வாறு பண்டைப் பழங்கால முதல் நிலவிப் பயன் தந்து வருபவை வடமொழியும் தென்மொழியும். இந்த இரண்டையும் மதித்துப் போற்றுகிறவர் குமரகுருபரர்.

மீனாட்சியம்மையைப் பாடும்போது,

''தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே!''

என்று போற்றுவார். முத்துக் குமரனை முத்தம் தா என்று வேண்டும் போது அவன் திருவாயைச் சிறப்பிக்கின்றார்; அந்தக் கனிவாயில் வடமொழியில் உள்ள மறையும் இனிய தமிழும் மணக்கின்றனவாம்.

''கலைப்பால் நிறைந்த முதுக்குறைவிற்
கல்விச் செல்வர் கேள்விநலம்
கனியக் கனிய அமுதூறும்
கடவுள் மறையும், முதற்சங்கத்
தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியும்
தண்தேன் நறையும் வடித்தெடுத்த
சாரம் கனிந்தூற் றிருந்தபசும்
தமிழும் நாற''

என்று பாடுகிறார். மதுரைப் பெருமானாகிய சோமசுந்தரக் கடவுளை,

''பொழிந்தொழுகு முதுமறையின்
சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகும் தீந்தமிழின்
மழலைசெவி மடுத்தனையே''

என்று பாராட்டுகிறார். கலைமகளை,

"துறைத்தமிழொடும் தொன்மறை
தெளிக்கும் கலைக்கொடி"

என்று பாடி மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் இனிமை கூட்டுவார். அப்படியே மதுரைக் கலம்பகத்தில் அவள் மறையையும் முத்தமிழையும் பாடுவதாகச் சொல்கிறார்.

"ஏடார் புண்டரிகத் திளமான் முதுபாடல்
எழுதா மறையோடும் இசைமுத் தமிழ்பாட"

என்பது அங்கே அவர் சொல்வது.

தம்முடைய ஞானாசிரியராகிய மாசிலாமணி தேசிகரை, இருமொழிகளிலும் சிறந்தவராகப் புகழ்கிறார்;

"நான்மறைக் கிழவ, நற்றவ முதல்வ,
நூல்முறை பயின்ற நுண்மைசால் அறிஞ,
சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்க் கவிஞ"

என்று சிறப்பிக்கிறார். 'நான்மறைக் கிழவ' என்றதனால் வடமொழியில் அறிவு பெற்றவர் என்பதும், 'தொகைத் தமிழ்க் கவிஞ' என்றதனால் தமிழ்ப் புலமை நிரம்பியவர் என்பதும் தெரிகின்றன.

இவ்வாறு இருமொழிகளையும் அடுத்தடுத்தே வைத்துச் சொல்லும் இயல்புடைய இம்முனிவர், கலைமகள் அந்த இரண்டு மொழிக்கும் உரியவள் என்று சொன்னதைப் பார்த்தோம். சகல கலாவல்லி மாலையிலும் அந்தக் கருத்தைச் சொல்கிறார்.

வடமொழியில் இலக்கியம், இலக்கணம், சாத்திரம், தோத்திரம், சமயம், தத்துவம், கலைகள் என்ற துறைகளில் பல பல நூல்கள் தோன்றியுள்ளன. பாரதநாட்டின் பொது மொழியாக இருந்தமையால் எல்லா நாட்டுப் புலவர்களும் அந்த மொழியில் நூல் இயற்றியிருக்கின்றார்கள். அநாதி என்று சிறப்பிக்கப் பெறும் வேதமும் இருக்கிறது; இன்றுள்ள

கவிஞர்கள் பாடும் நூல்களும் உண்டு; இனியும் புதிய நூல்கள் வரும்.

சிலர் வடமொழியை இறந்து போன மொழி என்று சொல்வார்கள். பொதுமக்கள் இப்போது அதை எங்கும் பேசாமையால் அப்படிச் சொல்கிறார்கள். சம்ஸ்கிருதத்தை என்றுமே யாருமே பேச்சுவழக்கில் பயன் படுத்தவில்லை. பிராகிருதம், அபப்பிரஞ்சம் என்ற வகையில் வடமொழியை ஆதாரமாகக் கொண்ட மொழிகளே வழக்கில் இருந்தனவே யன்றித் திருந்திய உருவிலுள்ள சம்ஸ்கிருதத்தை யாரும் பேசியதில்லை. ஆனால் கற்றறிந்தவர்கள் தமக்குள் பேசிக் கொண்டார்கள்; நாடகங்களில் நடிகர் பேசினர். புலவர்கள் நூல்களை இயற்றினர். இன்றும் வடமொழியை வித்துவான்கள் பேசிக் கொள்கிறார்கள்; அவையில் வடமொழியிலேயே சொற்பொழிவாற்றுகிறார்கள்; வடமொழியிலேயே நாடகங்கள் நடக்கின்றன. ஏன், வானொலியில்கூட வடமொழியில் செய்திகளை ஒலிபரப்புகிறார்களே! இத்தகையதை, செத்துப் போன மொழி என்று சொல்லலாமா?

இலத்தீன், கிரேக்க மொழிகள் இலக்கியச் செறிவுள்ளவை. அவற்றை இன்று பேசுவார் இல்லை. அவற்றில் நூல் எழுதுவாரும் இல்லை. அவற்றைப் போன்றது அன்று வடமொழி. இந்த உண்மையை அறிந்து குமரகுருபர முனிவர் அந்த மொழியைச் சிறப்பித்தே பாடுகிறார்.

வடமொழியில் நூல்கள் கடல் போலப் பரந்திருக்கின்றன. அதில் நூல் செய்த புலவர்களும், இன்றும் இயற்றிவரும் புலவர்களும் எங்கும் பரந்திருப்பதனால் அந்த மொழியில் உள்ள நூல்கள் கணக்கில் அடங்குவன அல்ல, எல்லையில்லாக் கடலைப் போல அவை பலபலவாகப் பரந்திருக்கின்றன. அத்தகைய வடநூற்கடலைத் தன்னுடைய தொண்டர்கள் அறிந்து நலம் பெறும்படி செய்கிறாள் சகல கலாவல்லி.

வடநூற் கடலும்......
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!

என்று அப்பெருமாட்டியைச் சொல்கிறார்.

அடுத்தபடி தமிழைச் சொல்கிறார். பல காலமாகப் புலவர்களாகிய மேகங்கள் பொழிந்த கவிமழை இங்கே தேங்கிக் கிடக்கிறது. நாளுக்கு நாள் இந்தத் தேக்கத்தில் தமிழ் பெருகிக் கொண்டே வருகிறது. செழுமையான தேக்கம் இது. கடல் நீரை யாவரும் நேரே உண்ண விரும்புவதில்லை. மேகந்தான் உண்ணும். அகத்தியர் குடிப்பார். ஆனால் செழுந்தமிழ்த்தேக்கத்தில் ஆழமும் பரப்பும் தெளிவும் உடைய நீர் இருக்கிறது. அதை யாவரும் பருகித் தாகம் தீர்கின்றனர்; முங்கித் துளைய மாடித் தூய்மை பெறுகின்றனர். அது வெறும் நீராகமட்டும் இல்லை. அதைச் செல்வமாகப் பல காலம் போற்றிப் பாதுகாக்கின்றனர். தேக்கத்தில் உள்ள நீர் கால்வாய் வழியே ஓடி உணவுப் பயிரை விளைவித்தும், மலர் கனி நிரம்பிய சோலைகளைத் தழைக்கச் செய்தும், குளிக்கவும் குடிக்கவும் உரியதாகியும் மறைமுகமாகவும் நேர்முகமாகவும் பயன்படுகிறது. தமிழும் சொற்சுவை பொருட்சுவை நுகரும் புலவர்களுக்கு நேர்முகமாக இன்பம் வழங்கியும், மற்றவர்களுக்குப் பொருளால் மறைமுகமாக நலம் தந்தும் விளங்குகிறது. இவற்றை நன்குணர்ந்த முனிவர் அதை,

தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வம்

என்கிறார்.

இந்த இரண்டையும் தொண்டர்களுக்கு அருளி, அவை அவர்கள் நாவில் நின்று வளந்தரும்படி, அந்த நாவில் நிலையாக நின்று நாமகள் பாதுகாக்கிறாளாம். வெறும் செல்வம் இன்று இருந்து நாளைக்கு மறைந்து விடும். இந்தச் செழுந்தமிழ்ச் செல்வமோ என்றும் இருக்கும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்று திருக்குறள் சொல்கிறது. அப்படிப் பிறவிதோறும் தொடர்ந்து வரும் செல்வம் அது. செல்வத்தை வங்கியில் போட்டு, அந்த வங்கி உடையாமல் காக்கும் காவலர்கள் இருந்தால், அது நாளுக்கு நாள் முதலும் வட்டியுமாக வளர்ந்து வரும். அது போல இது வளர்கிறது.

இந்த இரண்டு மொழிகளையும் தன் தொண்டர்களுக்கு வழங்கி அவை நீங்காமல் வளரும்படி காக்கிறாள் கலைமகள். அப்படிக் காக்கும் கருணை நிரம்பிய கடலாக அந்தத் தேவி இலங்குகிறாள்.

......வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே,
சகல கலாவல்லியே

என்று பாடுகிறார் இந்தத் தவமுனிவர்.

நாமகள் தொண்டர்களின் நாவைச் செந்நா என்கிறார். எல்லாருடைய நாவும் சிவப்பாகத்தான் இருக்கும். அவை நிறத்தால் செம்மை உடையவை. தொண்டர் நாவுகளோ திறத்தால் செம்மை உடையவை. செம்மை என்பது நிறைவையும், செழுமையையும், நடுநிலைமையையும், அழகையும் குறிக்கும். நிறைவும் வளமும் நடுநிலையும் அமைந்த கவிகளைப் பாடுகிறவர்கள் கலைமகள் தொண்டர்களாகிய புலவர்கள். அவர்கள் நாவில் பழைய நூல்கள் விளையாடும்; புதிய நூல்கள் விளையும். அவர்களைச் செந்நாப்புலவர் என்று சொல்லுவது வழக்கம்.

"செந்நாப் புலவன்யான் செல்கின்றேன்"

என்று கேட்டிருக்கிறோம் அல்லவா?

கலைமகளாகிய கருணைக் கடலினிடம் தம் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறார் குமரகுருபர முனிவர்.

பல நூல்களை அறிவதற்குக் கலைமகள் அருள்வேண்டும். பழைய காலத்தில் புலவர்களை, "நூலறி புலவர்" என்று போற்றுவார்கள். நூல்களை அறிந்து உணர்வதோடு தாமே நூல் படைக்கும் புலவர்கள் அவர்களைவிடச் சிறந்தவர்கள். அவர்கள் பழைய நூல்களை நுகர்வதோடு, புதிய நூல்களைப் பலரும் நுகர்ந்து இன்புறும்படி இயற்றுகிறவர்கள்; கல்வி மான்களாக இருப்பதோடு கவிச்சிங்கங்களாகவும் திகழ் கின்றவர்கள். இந்த இருவகை ஆற்றலும் இருந்தால்தான் புலமை முழுமை பெறும். பழஞ்செல்வத்தைப் பாது காத்துப் பயன்பெற்றும் பிறர் பெறச்செய்தும் வாழும் செல்வர், தம் முயற்சியினால் தாமே புதுச்செல்வத்தை ஆக்கியும் அளித்தும் வந்தால் செல்வம் குறையாமல் வளரும்; பலருக்கும் பல காலத்தும் பயன்படும். கவிஞர்கள் அத்தகையவர்கள். பழம் பனுவல்களைப் படிப்பதும், புதுப் பனுவல்களைப் படைப்பதும் ஆகிய இருவகை ஆற்றல்களும் சகலகலாவல்லியின் திருவருளால் கிடைக்கும்.

ஆதலால் அந்த இருவகை ஆற்றல்களையும் தமக்கு அருளும்படி வேண்டுகிறார் முனிவர்.

இயற்றப்படுவன எல்லாம் பனுவல்கள் ஆவதில்லை; இயற்றியவர் காலத்திலேயே மடிந்தொழியும் நூல்கள் பல; காலவெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்படும் நூல் களே பெரும்பான்மையாக இருக்கும். புலவர்கள், பல காலும் நிற்கும் நூல்களையே ஆராய்வார்கள். அவை அவர்கள் தூக்கும் பனுவல்கள்; ஆராய்வதற்குரிய நூல்கள். மக்கள் வாழ்வைத் தூக்கி நிறுத்தும் பயனுள்ளவையும் அவை. அவை எல்லாத் துறைகளிலும் உள்ளன.

அத்தகைய நூல்களை மேலெழுந்தவாரியாகப் படித்துப் பயனில்லை; அவற்றில் ஆழவேண்டும்; படிய வேண்டும்; தோய வேண்டும். நீர்த்துறைக்குச் சென்றவன், கரையில் இருந்து பார்த்துவிட்டு வருவதில் என்ன பயன் இருக்கிறது? ஒரு கை அள்ளிக் குடித்தால்கூடப் பெரும் பயன் இல்லை;

நீரில் இறங்கித் தோய்ந்து குள்ளக் குளிர முழுகித் துளைய மாட வேண்டும். நூல்களை ஆழ்ந்து பயில வேண்டும். அதுதான் உண்மையான கல்வி. 'அத்தகைய கல்வியை நீ அருள வேண்டும்' என்கிறார் முனிவர்.

> தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும்...
> பெருகப் பணித்தருள்வாய்.

அதற்குமேல் மற்ருேர் ஆற்றலும் வேண்டுமென்று விண்ணப்பிக்கிருர். அதுதான் நாவன்மையால் புதிய பனுவல்களைப் படைக்கும் ஆற்றல். அந்தப் பனுவல்கள் சுவையுடன் இருக்க வேண்டும். எத்தனை அற்புதமான கருத்துக்கள் உள்ளத்தில் இருந்தாலும் அந்தக் கருத்துக்கள் மொழி யென்னும் வாகனத்தில் ஏறி உலா வந்தால்தான் எவரும் காணமுடியும். 'எத்தனையோ ஊமைக் கவிகள் உலகத்தில் உள்ளனர்' என்று ஆங்கிலத்தில் ஒரு புலவன் பாடினுன். அந்தக் கவிஞர்களை உலகம் அறிவதில்லை. மலராத பூவில் மணம் ஏது? இணர் ஊழ்த்தும் நாரு மலர் போன்றவர்கள் அவர்கள்.

ஆகவே பொருள் மட்டும் உள்ளத்தில் இருந்தால் போதாது. அதைச் சொல்லில் வடிக்கத் தெரியவேண்டும். சுவையான சொல்வடிவத்தில் வந்தால்தான் யாவரும் உணர்ந்து கொள்ளமுடியும். வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத பரம்பொருள் வடிவுகொண்டு எழுந்தருளும்போது தான் எல்லாராலும் வணங்க முடியும். கண்ணுக்குத் தெரியாத உயிர் அழகிய உடலில் புகுந்தால்தான் யாவரும் காண உலவ முடியும்; செயல் செய்ய முடியும். எனவே சொல் வளம் இருந்தால்தான் வாக்கு வளம் உண்டாகும்; கவிகள் மலரும். "வாக்கிற்கு அருணகிரி" என்று சொல்லும்போது வாக்கு என்பது இந்தக் கவிவளத்தையே நினைப்பூட்டுகிறது. 'சொற்சுவை நிரம்பிய வாக்கு வளம் எனக்கு அருள்வாய்' என்று முனிவர் வேண்டுகிறார்.

> "சொற்சுவை தோய்
> வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்."

கல்வித் திறமையையும் கவித்திறமையையும் அருள்பவள் கலைமகள் என்பதை அறிந்து இந்த விண்ணப்பத்தைச் சகல கலாவல்லியிடம் சொல்கிறார்.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும், சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய், வட நூற்கடலும்,
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!''

என்று முழுப்பாட்டும் மலர்கிறது.

[தூக்கும் பனுவல் துறை—ஆராய்வதற்குரியனவும் பல துறைகளாக உள்ளனவும் ஆகிய நூல்கள். வாக்கு-கவி பாடும் ஆற்றல். செந்நா-புலமையை விளக்கும் நாக்கு.]

இது சகலகலாவல்லி மாலையில் உள்ள நான்காவது பாடல் மலர்.

# திருவடித் தாமரை

இந்திய நாட்டின் கலைகளில் எங்கும் மலர்ந்திருப்பது தாமரை மலர். பெருங்கலைஞராக விளங்கிய ஆனந்த குமாரசாமி, பாரதநாட்டின் கலைகளில் ஈடுபட்டு ஆராய்ச்சி செய்து பல நூல்களை எழுதியவர். அவர், "பாரத நாட்டின் கலைகள் எல்லாவற்றிலும் விரவித் தலைமை தாங்குவது தாமரைப்பூ" என்று சொல்கிறார். குழந்தைகளின் விளையாட்டுப் பாட்டில், "தட்டாமாலை தாமரைப்பூ" என்று மலருகிற அந்த மலரைச் சங்ககாலப் புலவர், "கடவுட்பூ" என்று சொல்கிறார்.

சிற்பங்களில் தாமரை மலரின் வடிவங்களைப் பல வகையில் கண்டு மகிழ்கிறோம். நாட்டியத்தில் அபிநயங்களில் தாமரை வரும் இடங்கள் உண்டு. ஓவியங்களில் தாமரையை எப்படி எப்படியோ காட்டுகிறார்கள். தெய்வங்களோடு அந்தக் கமல மலர் எப்படியெல்லாம் சம்பந்தப் பட்டு விளங்குகிறது! திருமகள் செந்தாமரைச் செல்வி. கலைமகள் வெண்டாமரை வித்தகி. இராஜராஜேசுவரி சகசிரார கமலத்தில் வீற்றிருக்கிறாள். முருகவேள் சரவணப் பொய்கைத் தாமரையிலே அழகு பெற இருந்தவர். இறைவன் இதய புண்டரீக மலரில் எழுந்தருளியிருக்கிறான். அருகக்கடவுள் தாமரைமேல் நடந்தவன். உடம்பில் உள்ள ஆறுதாரங்களும் அறு தாமரைகள்; அவற்றில் வெவ்வேறு மூர்த்திகள் எழுந்தருளி யிருக்கிறார்கள். சிவபெருமான் "தாமரைக்காடு அன்ன மேனித் தனிச்சுடர்"ராக விளங்குகிறான்.

தெய்வங்களில் காலும் கையும் முகமும் கண்ணும் உந்தியும் வாயும் கமலப் பூக்கள்,

மக்களுடைய உறுப்புகளுக்கு, அவர்களிலும் பெண்களு டைய உறுப்புகள் பலவற்றுக்குத் தாமரை உவமை யாகின்றது.

இப்படி உள்ள தெய்வீகத் தாமரைகளைக் கொண்டு இறைவனுக்கு அருச்சனை செய்கிறார்கள் அன்பர்கள். திரு மாலே ஆயிரம் கமலங்களைக் கொண்டு சிவபிரானை அருச் சித்து வழிபட்டார் என்று சிவபுராணம் கூறுகிறது.

கலைமகள் வெண்டாமரையில் வீற்றிருக்கிறாள். அவள் திருவடி கமலமலர் போல விளங்குகிறது. அவளுடைய கண வனும் தாமரைப் பூவை இருக்கையாக உடையவன்; ஆதலின் அவனை, 'கமலயோனி', 'பூமிசைப் பிறந்தோன்' என்று இனம் காட்டுவார்கள்.

சகல கலா வல்லி மாலையில் ஒரு பாட்டில் குமரகுருபரர் சில தாமரை மலர்களைச் சொல்கிறார்.

பிரம தேவன் படைப்புத்தொழிலை ஆற்றுகிறவன். நீண்ட தண்டையுடைய கமலத்தில் அமர்ந்திருக்கிறான். படைப்பாற்றல் வேண்டுமானால் கலைமகளின் அருள் வேண்டும். அவன் கலைமகளையே உரிமைத் தேவியாக உடையவன். அவனுடைய செந்நாவில் கலைமகள் வீற்றிருக் கிறாள். அவன் தன் நெஞ்சத்திலும் அவளை வைத்துப் போற்றுகிறான். அதனால் அவனுக்குத் தன் தொழிலில் ஊக்கம் மிகுதியாகிறது. சகல கலாவல்லி அவனுடைய எண்ணத்திலும் மொழியிலும் இணைந்து நிற்கிறாள். அவள் வெண்டாமரையில் விரும்பி வாழ்வது போலவே பிரமதேவ னுடைய நாவிலும் அகத்திலும் இருந்து நலம் செய்கிறாள். அன்னத்தைக் கொடியாக ஏந்தும் அந்தப் பிரமதேவனுக்கு வாழ்க்கைத் துணைவியாயிருந்து அவன் மொழியையும் எண்ணத்தையும் அறிவுடையவையாக்கி, அவனுடைய படைப்புத் தொழில் இடையூறின்றி நடக்கும்படி செய்கிற ஞானப்பிராட்டி சகல கலாவல்லி,

நெடுந்தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்து இருந்தாய்,
சகல கலாவல்லியே !

என்று போற்றுகிறார் குமரகுருபர முனிவர்.

கலைமகளின் திருவடி தாமரை போல்வது. நீர் நிலையில் மலர்வது கமலம். அன்புநீர் நிறைந்த உள்ளத்தில் கலைமகளின் கமலப்பூம்பதம் மலரும். அந்தத் திருவடி மிக்க எழிலுடையது. அதன் மேல் செம்பஞ்சுக் குழம்பை அப்பி யிருக்கின்றான். இயல்பாகவே செம்மையாக உள்ள அந்தத் திருவடி இந்தப் செம்பஞ்சுக் குழம்பினால் பின்னும் எழில் பெற்று விளங்குகிறது. தன்னை யார் யார் தியானிக்கிறார் களோ அவர்களுக்கு இதம் தருவது அது. அறிவைவிட இதமானது வேறு ஒன்றும் இல்லை. ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்று திருக்குறள் கூறுகிறது. அன்பர்களுக்கு இதம் தரும் பாதம் கலைமகள் பாதம்.

பஞ்சு அப்பு இதம்தரு ...... பாதம்.

அது செவ்வண்ணத்தை இயல்பாகவே பெற்றுத் திகழ் கிறது. என்றும் வாடாமல் பொலிவு பெற்று விளங்குகிறது. அந்தத் திருவடியை உளம்கொள்வார்களே பொலிவு பெறுவார்கள் என்றால், அதன் பொலிவைச் சொல்லவும் வேண்டுமோ? அது பஞ்சு அப்பிய பாதம்; இதம் தரு பாதம்; செய்ய பாதம்; பொற்பாதம்; பொன்போலப் பலவற்றையும் பெறுவதற்கு உதவும் திருவடி என்றும் சொல்லலாம்.

பஞ்சு அப்பு இதம்தரு செய்ய பொற்
பாத பங்கேருகம்

என்று வருணிக்கிறார் முனிவர். பாதமாகிய தாமரை ஒளி விட்டு விளங்குகிறது, பங்கேருகம் என்பது தாமரைக்கு ஒரு

பெயர். அதற்குச் சேற்றிலே முளைப்பது என்பது சொற்பொருள்.

குமரகுருபர முனிவர் சகலகலா வல்லியினிடம் ஒரு விண்ணவை எழுப்புகிறார். "படைக்கும் தொழில் செய்யும் பிரமனுடைய நெஞ்சிலும் நாவிலும் வாழும் தேவியே, கவிதையைப் படைக்கும் தொழிலைப் பெற்ற என்னுடைய நெஞ்சிலும் நீ எழுந்தருளக் கூடாதோ?" என்று கேட்கிறார்.

"வெண்டாமரையில் எழுந்தருளும் நீ பிரமன் நெஞ்சத்திலும் உறைகிறாய். உன் திருத்தாள் அவன் உள்ளத்தில் மலருகிறது. அதுபோல் என் உள்ளத்திலும் உன் திருவடித் தாமரை மலரக் கூடாதா?" என்பது போலச் சொல்கிறார்.

"அழுக்கு நிறைந்த உன் உள்ளத்தில் எப்படி உறைவது?" என்று சகலகலாவல்லி கேட்டால் என்ன சொல்வது? "இல்லை, இல்லை. என் உள்ளம் மாசு மறுவற்றது" என்று சொல்லலாமா? அப்படிச் சொல்வது அகங்காரத்தின்பாற் படும். "என் உள்ளம் குழம்பி அழுக்காகத்தான் இருக்கிறது. ஆனாலும் உன் பாததாமரை அதில் மலர வாய்ப்புண்டு" என்று வெளிப்படையாகவே சொல்லியிருக்கலாம். கவிஞர்கள் குறிப்பாகச் சொல்கிறவர்கள். அந்தக் குறிப்பு அவர்களுடைய வாக்கில் சுவையை உண்டாக்கும்.

குமரகுருபர முனிவரும் தம் நெஞ்சிலும் சகலகலா வல்லியின் திருவடிமலர் மலர்வதற்குப் பொருத்தமான காரணம் உண்டு என்பதை நுட்பமான முறையில் சொல்கிறார், 'பாத பங்கேருகம்' என்னும் தொடர் அந்தக் குறிப்பை உள்ளடக்கி நிற்கிறது.

தாமரை சேற்றில் முளைப்பதனால் பங்கயம், பங்கேருகம் என்ற பெயர்களைப் பெற்றது. தாமரை எழிலும் தூய்மையும் உள்ள மலர்; ஆனால் அது முளைக்கும் இடமோ குழம்பிய சேறு. தடாகத்தில் நீருக்கு அடியில் சேறு இருப்பதனால்

தாமரை முளைத்து வளர்ந்து மலர்கிறது. இவற்றையெல்லாம் நினைக்கும்படி செய்கிறது. 'பாத பங்கேருகம்' என்ற தொடர்.

"உன் திருவடி சேற்றில் முளைத்த தாமரை போன்றது. என் மனமோ பல குழப்பங்களையும் தீமையையும் உடையது! சேறு உடைய தடாகம்போல இருப்பது. இந்தத் தடாகத்தில் உன் திருவடி மலர்வதற்கு நியாயம் இருக்கிறது. பங்கேருகம் என்ற பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் அது சேற்றில் முளைக்க வேண்டும்; மயலாகிய சேறு நிரம்பிய குளம் போல உள்ள அடியேனுடைய நெஞ்சத்தில் உன் தாமரை போன்ற திருவடி மலரலாமே! அப்படி மலராததற்கு என்ன காரணம்?" என்று விரித்துப் பொருள் கொள்ளும்படி பாடல் அமைந்திருக்கிறது.

பாடலைப் பார்ப்போம் :

பஞ்சப்பு இதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகம்என்
நெஞ்சத் தடத்துஅல ராததுஎன்னே!
நெடுந் தாட்கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவும் அகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்,
சகல கலாவல்லியே!

[நீண்ட தண்டை யுடைய தாமரையில் அமர்ந்து, அன்னக்கொடியை ஏந்தியிருக்கும் பிரமதேவனுடைய சிவந்த நாவிலும் உள்ளத்திலும் வெள்ளைத் தாமரையாகிய இருக்கையைப் போல அமர்ந்திருப்பவளே, எல்லாக் கலைகளுக்கும் உரியவளே, செம்பஞ்சுக் குழம்பை அப்பியதும், அடியார்களுக்கு நன்மையைத் தருவதும், செந்நிறமானதும், பொலிவையுடையதுமாகிய நின்னுடைய திருவடித்தாமரை அடியேனுடைய உள்ளமாகிய தடாகத்தில் மலராமல் இருப்பது ஏன்?

பஞ்சு — செம்பஞ்சுக் குழம்பு. இதம் — ஹிதம்; நன்மை. பொன் — பொலிவு; பொன்னைப் போன்று பலவற்றையும் தரும் என்றும் சொல்லலாம். பங்கேருகம் — தாமரை, தடம் — குளம். என் — என்ன காரணம். ஏ : அசை. தாள் — தண்டு. அஞ்சத்துவசம் — அன்னக்கொடி, உயர்த்தோன் — உயர்த்திப் பிடித்தவன், அகம் — உள்ளம், வெள்ளைக் கஞ்சத்தவிசு — வெண்டாமரையாகிய ஆசனம்.]

சகலகலாவல்லிமாலையில் உள்ள 5-ஆம் பாடல் இது.

# முத்தமிழ் வேட்கை

கலைமகள் பராசக்தியின் வடிவங்களில் ஒன்றாக இருப்பவள் என்பது தேவியின் பெருமையைச் சொல்லு கின்ற நூல்களில் உள்ள கருத்து. எல்லாக் கலைகளுக்கும் தலைவியாக இருக்கும் லலிதாம்பிகையை, சதுஷ்ஷஷ்டி கலாமயி (830), கலாமயி (327), கலாத்மிகா (611), கலாநாதா (612) என்று லலிதா சகசிர நாமம் கூறும். சகல கலாவல்லியும் அந்த லலிதாம்பிகையின் உருவமே என்று அந்தத் திருநாமங்களால் அறிந்துகொள்ளலாம். கலைமகளுக் குரிய திருநாமங்களாகிய ப்ராம்ஹி (675), ஸரஸ்வதி (704) என்பவை லலிதா பரமேசுவரியின் திருநாமங்களைச் சேர்ந்தன வாக அந்தச் சகசிர நாமத்தில் வருகின்றன. மொழிகள் எல்லாவற்றின் வடிவாகவும் இருப்பவள் கலைமகள்; அம்பிகையையும் பாஷா ரூபா (678) என்று போற்றுவர். ஆகவே கலைமகளுக்கும் அம்பிகைக்கும் வேறுபாடு காணாத நிலையும் தேவி உபாசர்களுக்கு உண்டு

குமரகுருபரர் கலைமகளை, படைக்கும் தொழில் புரியும் பிரமனுடைய தேவியாகமட்டும் கருதாமல் அவளைப் பரா சக்தியின் அம்சமாகவே கருதி, சகலகலாவல்லி மாலையைப் பாடியிருக்கிறார்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில்,

"புண்டரிக வீட்டிற் பொலிந்து மதுரச்
சொற்பொலி பழம்பாடல் சொல்லுகின்றவளும்
நின் சொரூபம்"

என்று இவரே பாடுகிறார்.

இந்த நூலில் 6-ஆவது பாடல் அந்த எண்ணத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. அம்பிகையின் பெருமைகளைச் சகலகலாவல்லிக்கு ஏற்றிச் சொல்லும் வகையில் இந்தப் பாடல் அமைந்திருக்கிறது.

பராசக்தி வேதத்துக்கு மூலமாக இருப்பவள்; ஆதலின் வேதஜனனி என்ற பெயரை உடையவளாக இருக்கிறாள். வேதத்தால் அறியப்படுபவள் ஆதலின் அவளுடைய திருநாமங்களில் ஒன்றாக வேதவித்யா (335) என்பதை லலிதா சகஸ்ர நாமம் சொல்லுகிறது. அம்மையே வேதவடிவாக இருப்பவள் என்பதை ச்ருதி (539), த்ரயீ (862) என்ற திருநாமங்கள் புலப்படுத்தும். வேதத்தின் வடிவாகவும் வேதத்தில் நிறைந்த பொருளாகவும் அவள் விளங்குகிறாள்.

இந்த இயல்பைச் சகலகலாவல்லிக்கு ஏற்றிப் பாடுகிறார் குமரகுருபர முனிவர். எழுதாக் கிளவியாகிய மறையில் அவள் நிறைந்திருக்கிறாள் என்று கூறுகிறார்.

> எழுதா மறையும் ...
> நிறைந்தாய் சகல கலாவல்லியே !

அம்பிகை பூதங்கள் யாவற்றிலும் வியாபித்து நிறைந்திருக்கிறவள். எல்லா அண்டங்களும் அவள் திருவுருவாகவே இருக்கும்போது, ஐம்பெரும் பூதங்கள் விலக்கல்ல. பஞ்ச பூதேசி (949) என்பது அம்மையின் திருநாமங்களுள் ஒன்று. ஆதலின் அம்மை ஐம்பெரும் பூதங்களின் தலைவியாய் அவற்றினூடே இருப்பது வியப்பதற்குரியதன்று. "பூதங்கள் தோறும் நின்றாய்" என்று இறைவனைத் திருவாசகம் சொல்கிறது. அவனிலும் வேறுபடாத அம்பிகையும் சர்வாந்தரியாமியாக அவற்றில் நிறைந்திருக்கிறாள். அந்த இயல்பைக் குமரகுருபரர் கலைமகளுக்கு ஏற்றிச் சொல்கிறார். அவள் விண்ணாகிய ஆகாசத்திலும், புவியாகிய பிருதுவியிலும், புனலாகிய அப்புவிலும், கனலாகிய தேஜசிலும், காலாகிய வாயுவிலும் நிறைந்திருக்கிறாளாம்.

விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் ...
நிறைந்தாய் !

இறைவனுடைய வழிபாட்டில் ஈடுபடுகின்றவர்கள் அவனுடைய திருவுருவத்தை முதலில் புறக்கண்ணால் தரிசிக்கிறார்கள். அவர்கள் கண்கள் அந்தத் திருவுருவால் நிறைகின்றன; கண் நிறைந்த காட்சி அது. புறக்கண்ணிலே பார்த்ததோடு நில்லாமல் அந்த வடிவை அகக்கண்ணிலும் பார்க்க முயல்கின்றார்கள்; உள்முகத்தே தியானிக்கிறார்கள். 'உயிராவணம் இருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியில் உருவெழு'துகின்றார்கள். அப்போது அந்தத் திருவுருவம் உள்ளத்தே நிறைந்து நிற்கிறது. கண்ணாற் கண்டு, பிறகு கருத்திலே அமைத்துக் காணும் இதுவே யோகம்.

''கருணை வதன பத்மமும்
கமல விழியும் விழியும் மனமும் எழுதி எழுதி நித்தலும்
அடிகள் எனஉன் அடிகள் பணியும் அடியர்''

என்று இந்த இயல்பை முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் கூறுவார்.

ஐந்துபொறிகளில் கண் சிறந்தது என்று சொல்வார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு. அது கருத்தில் உள்ளதை வெளிப்படுத்தும் சாளரமாக உதவும். கருத்துக்குள் புகுவதற்கு வாயிலாகவும் அமையும். காணாவிட்டால் கருத்தில் பதியாது என்ற பொருளுடைய ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. (Out of sight out of mind.)

''கண்வழி உளம்புகும் கள்வனே கொலாம்'' என்று கம்பர் பாடுவார். ஆதலின் உள்ளத்தில் புகுவதற்குக் கண்ணே திருவாயில் என்று சொல்லவேண்டும். அதனால் தான் பிற பொறிகளோடு கருத்தை இணைத்துச் சொல்லாமல், "கண்ணும் கருத்தும்" என்று சொல்கிறோம். கருத்துக்குரிய செயலாகிய கருதுதலுக்குக் கண்ணுதல் என்றும், கருதி என்னும் பொருளில் கண்ணி என்றும் சொல்கிறோம். இந்தச் சொல்வடிவில் கண் இருப்பதைக் காணலாம்.

இறைவனைக் கண் நிறையத் தரிசித்துக் கருத்து நிறையத் தியானிக்கும் இந்த அநுபவத்தைச் சகலகலா வல்லியின் அன்பரிடத்திலும் காணலாம். ஆகவே,

> அன்பர்
> கண்ணும் கருத்தும் நிறைந்தாய்,
> சகல கலாவல்லியே!

என்று குமரகுருபரர் பாடுகிறார்.

இவ்வாறு மறைகளிலும் ஐம்பூதங்களிலும், அன்பர்களின் கண்களிலும், கருத்துக்களிலும் நிறைந்து விளங்கும் சகல கலாவல்லியிடம் விண்ணப்பம் ஒன்றைச் சொல்கிறார்; தமக்குப் பலவகையான கல்வித் திறமையும் வருந்தாமல் எளிதிலே வாய்க்கும்படி அருளவேண்டும் என்று சொல்கிறார்.

தமிழில் மூன்று வகை உண்டு என்று சொல்வது மரபு. இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் முத்தமிழ் என்று சொல்வார்கள். இந்த மூன்றும் எல்லா மொழிகளிலும் உள்ளன. என்றாலும் தமிழில்தான் இந்த மூன்றையும் ஒரு கொத்தாக்கி முத்தமிழ் என்று சொல்லும் வழக்கு இருக்கிறது. இந்த மூன்றும் மொழியோடு தொடர்புடையவை.

'உளம் கொண்டு தெள்ளித் தெளிக்கும் பனுவல்' என்று இலக்கியத்தைக் குமரகுருபரர் கூறுவார். உள்ளத்தின் உணர்ச்சியினால் எழுவது கவிதை. ஆதலின் இயல் தமிழுக்கு உள்ளம் இன்றியமையாதது. இசைத் தமிழுக்குக் குரல் வேண்டும். உள்ளத்து உணர்வும்வேண்டும். அதை மனோதர்மம் என்று இசைவல்லுநர் கூறுவர். உள்ளம் உரை என்னும் இரண்டு கரணங்களும் இணைந்து செயல்படச் செய்வது இசை. நாடகத்தில் பாவங்களுக்கு அடிப்படையான உணர்வும், உரையாடலும், உடலுறுப்புக்கள் தோற்றுவிக்கும் மெய்ப்பாடுகளும் வேண்டும். அதில் உள்ளம், உரை, உடல் என்னும் மூன்று கரணங்களும்

பயன்படும். இவ்வாறு மூன்று கரணங்களின் தொழிற்பாடாக இருப்பதனால் இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் ஒரு கொத்தாக இணைத்துத் தமிழர் வழங்கினர்.

அந்த மூன்றையும் தமக்கு அருளவேண்டுமென்று சகலகலாவல்லியிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார் முனிவர்.

முதலில் இசையைச் சொல்லிப் பின்பு நாடகத்தைச் சொல்லிப் பிறகு இயலைச் சொல்கிறார்.

> பண்ணும் பரதமும் கல்வியும்
> தீஞ்சொற் பனுவலும் யான்
> எண்ணும்பொழுது எளிது எய்த
> நல்காய்.

பண் என்றது இராகத்தைக் குறிப்பதானாலும் இங்கே இசையைக் குறித்து நின்றது. பதம் என்றது பரத நாட்டியத்தைக் குறிப்பதானாலும் இங்கே நாடகப் பகுதிகள் அனைத்தையும் குறித்து நின்றது. இவை இரண்டும் உபலட்சணம்.

இயற்றமிழ் வல்லவர்கள் பழைய நூல்களைக் கற்று வல்லவர்களாக இருப்பார்கள்; புதிய பனுவல்களை இயற்றவும் ஆற்றலுள்ளவர்களாக இருப்பார்கள். பல நூல்களைக் கற்று மூளையில் ஏற்றிக் கொண்டால் அந்த அறிவு சுமையாக நின்று மூளையை அழுத்துமென்றும், புதிய நூல்களை எழுத அது தடையாக இருக்குமென்றும் சிலர் தவறாக எண்ணுவது உண்டு. கம்பர் மிகச் சிறந்த கவிஞர் என்பதற்கு யாரும் மறுப்புக் கூறமாட்டார்கள். ''கம்ப நாடன் கவிதையிற் போல் கற்றோர்க் கிதயம் களியாவே'' என்று ஒரு பாட்டு உண்டு. கவிச்சக்கரவர்த்தி என்று அவரைச் சொல்வதை யாவரும் அறிவர். அவர் கல்வியிலும் சிறந்தவர். இலக்கண உரைகளில், 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்ற வாக்கியத்தை ஆசிரியர்கள் மேற்கோளாகக் காட்டுவார்கள். அதிலிருந்து அவருடைய கல்விப் பெருமையும் தெரியும். அந்தக் கல்வி அவருடைய கவிப்புலமையினை அழுத்தவில்லை.

எனவே, பழைய நூல்களை ஓதி உணரும் கல்வியாற்ற லும் புதிய நூல்களை இயற்றும் கவியாற்றலும் புலவனென்ப தற்குரிய இலக்கணங்கள். பழங்காலத்தில் புலவர் என்றால் கல்வி கற்றுக் கவிபாடும் திறலுடையோர்களைக் குறிப்பார் கள். இப்போது கற்றவரைப் புலவரென்றும், கவி பாடு பவரைக் கவிஞர் என்றும் வேறு பிரித்துச் சொல்கிறார்கள்.

கல்வியாற்றலும் கவியாற்றலும் ஒருங்கே அமையும் இயற்றமிழ்ப் புலமை தமக்கு வேண்டும் என்றே குமரகுரு பரர் சகல கலாவல்லியை வேண்டுகிறார். கல்வி என்று நூலறி புலமையையும், தீஞ்சொற் பனுவல் என்று நூல் படைக்கும் புலமையையும் சொல்கிறார்.

'மூன்று தமிழையும் நான் நினைக்கும்பொழுது எளிதில் வரும்படி அருளவேண்டும்' என்று வேண்டுகிறார். எல்லோ ரும் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள முடியாது. மதி நுட்பம் உடையவர்கள் கல்வியில் வல்லவர்கள் ஆவார்கள். ஆனால் பல காலம் பயில்வதனால் அந்தக் கல்வியறிவு நிறையும். கலைமகளின் திருவருள் இருந்தால் எளிதில் அது கைகூடும். ஒரு முறை படித்தாலே மனத்தில் பதிந்துவிடும். ஓதுதல் என்றால் பலகாலும் பயிலுதல். அருளாளர்கள் ஒரு முறை கேட்டாலும், படித்தாலும் மனத்தில் பதித்துக் கொள்வார்கள். ஏக சந்தக்கிராகிகள் என்று வடமொழியில் சொல்வார்கள். அவர்களே ஓதாது உணர்ந்தவர்கள்.

அவ்வாறு, பலகால் முயன்று பெறாமல் எளிதிலே தமக்கு முத்தமிழ்ப்புலமையையும் பாலிக்க வேண்டும் என்று வேண்டுகிறார் ஆசிரியர்.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்தநல்
காய்;எழு தாமரையும்

விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்,
சகல கலாவல்லியே!

[எழுதாக் கிளவியாகிய வேதத்திலும், ஆகாயத்திலும், பூமியிலும், நீரிலும், நெருப்பிலும், விரும்பத்தக்க காற்றிலும், அன்பர்களின் கண்ணிலும், கருத்திலும் நிறைந்தோய், சகலகலாவல்லியே, இராகம் முதலிய இசையும், பரதநாட்டியம் முதலிய நாடகமும், நூல்களைக் கற்கும் கல்வியறிவும், இனிய சொற்களோடு கூடிய நூல்களைப் படைக்கும் ஆற்றலும் யான் வேண்டும் என்று நினைக்கும் பொழுது, வருந்தாமல் எளிதில் வந்து அடையும்படி அருள் செய்வாயாக!

பண்-இராகம்; இங்கே இசைத் தமிழைக் குறித்தது. பரதம்-பரதநாட்டியம்; இங்கே நாடகத் தமிழைக் குறித்தது. தீஞ்சொல்-இனிய சொற்கள் அமைந்த. பனுவல் என்றது பனுவலை இயற்றும் ஆற்றலைக் குறிக்கும் ஆகுபெயராய் நின்றது. வெம்-விரும்பும்; வெங்கால்-வேகமாக வீசும் காற்று என்றும் பொருள் கொள்ளலாம்.]

# கவிதை அநுபவமும் பயனும்

தமிழில் பழங்காலத்தில் புலவர்கள் செய்யுளை எழுதிக் குவித்தார்கள். தாம் கண்ட காட்சிப் பொருள்களை அழகாக வருணித்துப் பாடல்களை இயற்றினார்கள். அவர்கள் கண்ட காட்சிகளை நாம் காணவிட்டாலும் அந்தக் கவிதைகளைப் படிக்கும்போது அவற்றில் ஆழ்ந்தால் நம் மனக்கண் முன்னே அந்தக் காட்சிகள் தோன்றி இன்பம் பயக்கும். நாம் கண்ட காட்சிகளை அவர்கள் எடுத்துச் சொன்னாலும், நாம் காணாத அழகை அந்தப் பாட்டுக்களின் மூலம் அறிந்து இன்புறுவோம். சித்திரகாரன் ஓவியத்தில் தான் கண்டவற்றையும் கற்பனை செய்தவற்றையும் காட்டுகிறான். அவற்றைக் கண்ணால் கண்டு மகிழ முடிகிறது. கவிஞனோ சொல்லையே வண்ணமாக வைத்து, காட்சியைக் கோலம் செய்யும்போது அந்தக் காட்சி நம் உள்ளத்திலே ஓவியமாகப் பதிந்து இன்பத்தை உண்டாக்குகிறது. ஓவியனுக்குக் கிழியோ சுவரோ வேண்டும்; வண்ணமும் தூரிகையும் வேண்டும். அத்தகைய கருவி ஏதும் இல்லாமல் கவிஞன் சொற்களைக் கொண்டே காட்சியை வரைந்து விடுகிறான். நம்முடைய உள்ளத்தைத் தூண்டிவிட்டு அத்தகைய காட்சியை அநுபவிக்கச் செய்து விடுகிறான். ஓவியனை விட வல்லவனாக விளங்குகிறான் கவிஞன்.

இதைவிட இன்னும் அருமையான காரியம் ஒன்றைக் கவிஞன் செய்துவிடுகிறான். மிக நுட்பமான கருத்துக்களைச் சொல்லிலே வடித்து நம் மனத்தில் பதிய வைக்கிறான். கருத்துப் பொருள் நுட்பமானது. அதைத் திட்பமான சொல்லிலே அமைத்துக் காட்டும்போது அந்தக் கருத்து நம்

உள்ளத்தில் ஆழப் பதிந்து விடுகிறது. மனிதனுடைய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் சொல்லிலே சிறை செய்து காட்டுகிறான். நாமே அந்த உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் கொண்டிருந்தாலும், நம்மாலே அவற்றை வெளிப்படுத்த முடிகிறதில்லை. கவிஞனே அவற்றைச் சொல் வடிவில் வடித்துத் தரும்போது, இவன் எப்படி நம் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்த உணர்வுகளை எடுத்துச் சொல்கிறான் என்று வியப்படைகிறோம். உணர்ச்சியை உடைய நம்மால் வெளியிட இயலாமல் நாம் ஊமையாக நிற்கிறோம். அவன் நம் உள்ளத்தின் அந்தரங்கத்தில் புகுந்து கண்டுகொண்டதைக் கவியாக வெளியிடும்போது, "இது பெரிய மாய ஜால வித்தை!" என்று வியக்கிறோம்.

நாம் அநுபவிக்காத உணர்ச்சியாக இருந்தாலும், எண்ணாத எண்ணமாக இருந்தாலும் கவிஞனுடைய பாட்டில் அவற்றைக் கண்டு தெளியும்போது, நாமும் அந்த உணர்ச்சியைப் பெறுகின்றோம். துயரச் செய்தியை அவன் சொல்லும்போது நாமும் துயரத்தை அடைகிறோம். பக்தி உணர்ச்சியை எழுப்பும்போது நம் உள்ளத்திலும் பக்தி உணர்ச்சி மணக்கிறது. கோபம், தாபம், அவலம், நகை ஆகிய உணர்ச்சிகளைக் கவிதையின் வாயிலாக உணரும் போது ஓர் ஆச்சரியம் நிகழ்கிறது. நாமும் அந்த உணர்ச்சி யிலே ஈடுபடுகிறோம். ஆனால் கோபம் முதலிய உணர்ச்சி நமக்கு இயல்பாக எழும்போது அவை நமக்கு இனிப்பதில்லை. கோபித்துக் கொள்பவன், அந்தக் கோபம் அடங்கின போது, "ஏன் இப்படிப் பைத்தியக்காரத்தனமாகக் கோபம் கொண்டோம்?" என்று எண்ணி இரங்குகிறான். ஆனால் கவிதையில் வரும் கோபமோ அவலமோ நம்மிடத்தில் கோபத்தைப் போலவும் அவலத்தைப் போலவும் உணர்ச்சியை உண்டாக்கினாலும் அவை தீங்கை விளைப்பதில்லை. அவற்றை மீண்டும் மீண்டும் பெற விரும்புகிறோம். கவிதையைப் பன்முறை படிக்கிறோம். காரணம் என்ன?

கவிதையைப் படித்து உணரும்போது நாம் அடைகின்ற கோபம் முதலியன இயல்பான கோபம் அல்ல. அவை இன்பத்தைத் தருகின்ற சுவைகள். அதனால்தான் மீண்டும் மீண்டும் படிக்க விழைகிறோம். நம் வாழ்க்கையில் நமக்கு உண்டாகும் கோபம், இயல்பான வெகுளி. ஆனால் கவிதையில் நாம் உணர்வது வெகுளி அன்று; வெகுளிச்சுவை. அவலச்சுவையை உண்டாக்கும் கவிதையில் ஈடுபடும்போது நாம் சில சமயங்களில் கண்ணீர் விடுகிறோம். அது இயல்பாக நமக்கு உண்டாகும் அவலக் கண்ணீர் அன்று. அவலச் சுவையினால் விளையும் கண்ணீர் அது. ஒரு வகையில் அதை இன்பக் கண்ணீர் என்றே சொல்லவேண்டும். வாழ்க்கையில் நேரும் அவலம் துன்பத்தை உண்டாக்கும் துயர நிகழ்ச்சி. கவிதையில் காணும் அவலம் இன்பத்தை உண்டாக்கும் அவலச் சுவை.

பாட்டை ஆழ்ந்து படிக்கவேண்டும். முதலில் அந்தப் பாட்டின் வடிவம் நம்மைக் கவரும். பிறகு அதன் கருத்தை உணரவேண்டும். அப்போது சுவை உணர்வு எழும். அப்பால் அதிலே ஆழ்ந்து இன்பத்தைப் பெறுவோம். பாட்டின் வடிவம், பொருள், பயன் என்ற இந்த மூன்றையும் மூன்று நிலைகளில் உணர முடியும். அப்படி மூன்றையும் உணர்ந்தால்தான் பாட்டைப் பயின்றதாகக் கொள்ள முடியும்.

இலக்கியம் மனிதனை விலங்கு உணர்வினின்றும் உயர்த்தி மனிதன் ஆக்கி, பிறகு பின்னும் உயர்த்தித் தெய்வ நிலையை அடையச் செய்யும். "தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்" என்று பாரதியார் பாடுகிறார். வாழ்க்கைக்குப் பயன்படாத எதுவும் இலக்கியம் ஆகாது என்பது நம் நாட்டினர் கொள்கை. "அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்று இலக்கணம் சொல்கிறது. ஆதலின் கல்விக்காகக் கல்வி, கவிதைக்காகக் கவிதை என்று சொல்லும் கருத்தை இந்த நாட்டுப் பெரியோர்கள் ஏற்பதில்லை.

காதுக்கு இனிக்கும் பாட்டைப் படிப்பதோடு நிற்கக் கூடாது; கருத்துக்கு இனிக்கும் பொருளை உணர்வதோடு அமையக் கூடாது. அதற்கு மேலும் சென்று பயனைப் பெற வேண்டும். "சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதானை" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்திருக்கிறார். தூய்மையை நோக்கி இரண்டறக் கலந்தவன் உள்ளத்தில் இருள் நீங்கி ஒளி பாயும்.

எல்லோரும் பாட்டை எளிதில் படித்துவிட முடியாது, அதற்கு ஒரு தகுதி வேண்டும். கலைமகள் திருவருளால் அந்தத் தகுதி அமையும். அதற்குமேல் அதன் பொருளைத் தெள்ளத் தெளிவதற்கும் கலைமகளின் அருட்பார்வை வேண்டும், அதோடு நின்றாலும்' போதாது. பாட்டின் பயனைப் பெறவேண்டும். அதற்கும் சகலகலா வல்லியின் கடைக்கண் பார்வை வேண்டும்.

இவற்றையெல்லாம் எண்ணிக் குமரகுருபர முனிவர் பாடுகிறார். "சகலகலா வல்லியே, பாட்டு, பொருள், அதனாற் பொருந்தும் பயன் ஆகிய இவை என்னிடம் நீயே கூட்டுவிக்க வேண்டும்; அதற்காக உன்னுடைய கடைக்கண் பார்வையை எனக்கு நல்கவேண்டும்" என்று வேண்டுகிறார்.

> பாட்டும் பொருளும் பொருளால்
> பொருந்தும் பயனும் என்பால்
> கூட்டும்படி நின் கடைக்கண்
> நல்காய் !

கலைமகளின் தொண்டர்களாகிய கவிஞர்கள் தம் உள்ளத்தினால் தெள்ளத் தெளிந்து கவிதை மாரி பொழிகிறார்கள். முன்பு, "உளம் கொண்டு தெள்ளித் தெளிக்கும் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு, களிக்கும் கலாப மயிலே" (3) என்று இந்த மாலையில் பாடினார். அத்தகைய புலவர்கள் உளம் கொண்டு தீட்டும் கவிதைக் கலை மிக அரிய

அழகிய கலை. புலவர்களும் முக்குண வயப்பட்டவர்களா தலின் அவர்கள் பாடுவன எல்லாம் ஒரு சீராக அமைய முடியாது. அவர்களைக் கேட்டாலே, சிலவற்றைச் சுட்டி, ''இவை நான் பாடிய சிறந்த கவிதைகள்'' என்று சொல் வார்கள். ஆகவே அவற்றிலும் தரம் உண்டு என்று தெரிந்து கொள்ளலாம்.

நம் வாழ்நாள் சிறியது. புலவர்கள் இயற்றிய எல்லா வற்றையும் ஓதி உணர்வது என்பது இயலாத காரியம். அவற்றுக்குள் நமக்குப் பயன்படுவனவற்றைத் தேர்ந் தெடுத்துப் பயிலவேண்டும். வாழ்க்கையில் மக்களுக்கு வெவ்வேறு வகையில் சுவை இருக்கும். வெவ்வேறு வகையில் பயனும் இருக்கும். ஒரு பெரிய விருந்தில் பரிமாறும் எல்லா உணவுகளையும் எல்லாரும் உண்பார்கள் என்று சொல் வதற்கு இல்லை. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகை உணவு பிடிக்கும். சிலவற்றை உண்ண விரும்பாமல் ஒதுக்குவதும் உண்டு. அவ்வாறே கவிதையிலும் நமக்கு வேண்டாதது வற்றை ஒதுக்கி வேண்டியவற்றைப் பயிலவேண்டும்.

நீரையும் பாலையும் கலந்து வைத்தால் அன்னப்பறவை நீரை விட்டுப் பாலை உண்ணும் என்று சொல்வார்கள். நூல்களைப் படிப்பதிலும் நாம் அன்னத்தைப் போல இருக்க வேண்டும்.

> ''கல்வி கரைஇல; கற்பவர் நாள்சில;
> மெல்ல நினைக்கின் பிணிபல;—தெள்ளிதின்
> ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, நீர்ஒழியப்
> பால்உண் குருகின் தெரிந்து'' (கல்வி. 5)

என்று நாலடியார் கூறுகிறது. இந்தப் பாட்டில் அன்னத் தையே உவமை கூறுகிறார் புலவர்.

கலைமகளின் தொண்டர்களாகிய புலவர் தீட்டும் கலைத் தமிழ், பாற்கடல் போல விரிந்திருக்கிறது. அதில் நீரும் கலந்திருக்கும். நாம் பாலையும் நீரையும் வேறாக அறிந்து

பாலை உண்ணவேண்டும். குழந்தை கண்டதையெல்லாம் வாயிலே போட்டு விழுங்குவதைப் போலப் பலர் எல்லாவற்றையும் படிப்பர். நாம் எதைக் கொள்ளவேண்டும், எதைத் தள்ளவேண்டும் என்று அவர்களுக்குத் தெரியாது. சாரமற்றவற்றை ஒதுக்கித் தள்ள ஒரு தகுதி வேண்டும். நல்லதை உணர்ந்து தெரியும் ஆற்றல் (Sense of judgement) இருந்தால்தான் இலக்கியத் திறனாய்வும், இலக்கிய இன்ப நுகர்ச்சியும் கைகூடும். இதற்கும் வழிகாட்டுகிறவள் கலைமகள்தான்.

அவள் கலைத்தமிழ்த் தீம்பாலை நீரினின்றும் வேறு படுத்தித் தெளிவு காட்டும் பெண் அன்னத்தைப் போல, ஓதிமப் பேட்டைப் போல, இருக்கிறாள். நாமும் அவள் வழி காட்டினால் பால் வேறு, நீர் வேறு என்ற ஆராய்ந்து தமிழ்ப்பாலை உண்ணலாம்.

அன்னம் வெள்ளை நிறம் உடையது. கலைமகளும் வெண்ணிறம் உடையவள். அன்னத்தின் மூக்கும் அடியும் சிவந்திருக்கும். "படிக நிறமும் பவளச் செவ்வாயும்" (கம்பர்) என்று அவள் வெண்மைத் திருமேனியையும் சிவந்த திருவாயையும் வருணிப்பார்கள். அவள் திருவடிகள் சிவப்பை யுடையன என்பதைக் குமரகுருபர முனிவரே, "பஞ்சப்பிதந்தரு செய்ய பொற்பாத பங்கேருகம்" (5) என்று பாடியிருப்பதை முன்பு பார்த்தோம். ஆகவே, கலைமகளை வெள்ளோதிமப் பேடு என்று சொல்வது பல வகையிலும் பொருத்தமானது. அவள் அருளால், அவள் வழி காட்டுவதால், நாமும் அன்னம் பாலையும் நீரையும் பிரித்து அறிவது போல், சாரத்தையும் சக்கையையும் வேறு பிரித்து அறிந்து சாரத்தைக் கொண்டு பயன் அடையலாம். இதை அடுத்தபடி சொல்கிறார் முனிவர்.

உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ஓதிமப் பேடே,
சகலகலா வல்லியே!

என்கிறார். அவள் காண்பதோடு நமக்கும் காட்டும் குரு ஆவாள். ஓவியத்தைச் சுவரிலோ இழியிலோ தீட்டுவது போல உள்ளத்தே தீட்டுவதால், 'தீட்டும் கலைத்தமிழ்' என்கிறார். ஏட்டில் எழுதுவதைச் சொன்னதாகவும் கொள்ளலாம்.

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும்என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்
காய், உளம் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே!

[உள்ளத்தைக் கொண்டு நின் தொண்டர்களாகிய கவிஞர்கள் எழுதும் கலையாகிய, தமிழ்க் கவிதையாகிய, இனிய பாலையும் நீரையும் தெளிந்து பிரித்துப் பாலை நுகரும் வண்ணம் அருளைக் காட்டும் வெண்ணிறமுடைய பெண் அன்னமாகிய சகலகலாவல்லியே, பாட்டும் அதன் பொருளும் அதனை உணர்ந்ததனால் உண்டாகும் பயனும் என்னிடம் கூட்டும்படியாக நின்னுடைய கடைக்கண் பார்வையை வழங்கியருள்வாயாக.

பாட்டு—கவிதை. பொருள்—அதன் சொற்பொருளும் கருத்தும். பயன்—ரஸாநுபவம்; அறம், பொருள், இன்பம், வீடு என்றும் சொல்லலாம். கடைக்கண்: ஆகுபெயர்; பார்வைக்கு ஆயிற்று. அமுதம்—நீர். தொண்டர்—கலை மகளின் தொண்டர்களாகிய கவிஞர்கள். தீட்டும்-வரையும். ஓதிமப் பேடு—பெண் அன்னம்.]

பாட்டை அநுபவிக்கவும் பயன் அடையவும் அருள்பவள் கலைமகள் என்பது கருத்து.

இது சகலகலாவல்லி மாலையிலுள்ள ஏழாவது பாட்டு.

# மூன்று வரம்

கல்வி கற்பவர்கள் யாவரும் ஒரே நிலையில் இருப்பவர்கள் அல்லர். குடத்தில் இட்ட விளக்கைப்போல, நன்றாகப் படித்திருந்தாலும், யாவரும் தெரிந்து கொள்ளும் படி விரித்துரைக்கும் ஆற்றல் எல்லோருக்கும் அமைவதில்லை. ''சாகப் போகிறாயோ, பேசப் போகிறாயோ?' என்று ஒரு பழமொழி உண்டு. அவையில் தெளிவாகப் பேசுவது சிலருக்கு மரண வேதனையை உண்டாக்குமாம். எவ்வளவு கற்றிருந்தும், கற்றதைப்/ பிறர் உளம் கொள்ள, செலச் சொல்வார் புலவர்களிற் சிறந்தவர்கள். அந்த ஆற்றல் சிலருக்கே வாய்க்கும். ''சொல்வளம், மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும், செல்வமும் உண்டு சிலர்க்கு'' என்று குமரகுருபர முனிவரே நீதிநெறி விளக்கத்தில் சொல்லிருர். மரங்களில் மலர்கள் மலர்வது உண்டு. ஆனால் எல்லா மலருக்கும் நறுமணம் இருப்பது இல்லை. சில மலர்களுக்கு மணம் இராது. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதவர்களிலும் சிறந்தவர்கள் - என்பதில் ஐயம் இல்லை. பல இலைகள் இருந்தாலும் மலருக்குச் சிறப்பு மிகுதி. கல்லா மாந்தர்களுக்கு இடையே கற்றவர்கள் இலைகளினூடே மலரைப் போல விளங்குவார்கள்.

ஆயினும் அந்த அளவில் நிற்பவரைவிடக் கற்றதை எடுத்துச் சொல்லும் ஆற்றல் உள்ளவர்கள் மலர்ந்து மணம் பரப்பும் நறுமலர்களைப் போன்றவர்கள்.

> 'இணர்ஊழ்த்தும் நாறா
> மலர்அனையர், கற்றது
> உணர விரித்துரையா தார்''

என்பது திருக்குறள். அவையில் பேச மாட்டாதவர்கள் எவ்வளவு கற்றிருந்தாலும் மணம் இல்லா மலரைப் போன்றவர்களே. சொல்வன்மை இருந்தால்தான் கல்வி விளக்கத்தைப் பெறும். இதை உணர்ந்த குமரகுருபரர் முனிவர் சகல கலாவல்லியிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார். "தாயே, நான் கற்ற கல்வியைப் பயன்படுத்தி அவைகளில் சொல் வளத்தோடு பேசவேண்டும். அதற்கு வேண்டிய திறமையை எனக்கு அருளவேண்டும்" என்று தொடங்குகிறார்.

சொல்விற்பனமும்...
தந்து அடிமை கொள்வாய்.

விற்பனம் என்றது, புலமை; வாக்கு வளம் வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்கிறார். அவையில் நன்கு பேச வல்லவரை வாக்கி என்று சொல்வார்கள். வாக்மி என்ற வடசொல்லின் திரிபு அது. நாவன்மை இருந்தால் பலரையும் மகிழச் செய்யலாம். பதினாயிரம் பேருக்கு ஒருவரே வாக்கு வன்மை உடையவராக இருப்பார்களாம்.

"ஆர்த்தசபை நூற்றொருவர்;
ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்"

என்று கணக்குச் சொல்கிறார் ஔவையார்.

கற்றவர்கள் நினைவாற்றலுடன் இருந்தால் கற்றவற்றை நன்றாகப் பயன்படுத்த முடியும். கற்றவற்றை மறந்து போனால் அவர்களுடைய கல்வி பயன் படாது. ஓட்டைக் குடத்தில் நீரை விட்டுக்கொண்டே இருந்தாலும் அது நிரம்பாது. எவ்வளவு கற்றாலும் அவற்றை மனத்தில் தேக்கிக் கொள்ளாமல் இருந்தால் படித்தும் பயன் இல்லாமல் போய் விடும். அவையில் பேசுகிறவர்களுக்கு ஞாபகசக்தி இன்றியமையாதது. இராமனுடைய அம்பறாத்தூணியில் எடுக்க எடுக்க அம்புகள் வருவதைப்போல, நினைவாற்றல் உடைய

வர்கள் சொல்வளம் அவர்கள் கற்ற நூல்களினால் சிறப் படையும். பல நூல்களைக் கற்பதன் பயனே அது.

ஞாபகசக்தி உள்ளவர்கள் பேசுகையில் இடத்துக்கு ஏற்ப மேற்கோள்களைக் காட்டும்போது, கேட்பவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். பேசும்போது, அவர்களுக்குத் துணையாக வள்ளுவரும், கம்பரும், கபிலரும், பரணரும் அவ்வப்போது வந்து கைகொடுப்பார்கள். பாயசத்தில் ஏலம் போட்டாற் போலவும்; முந்திரிப்பருப்பைப் போட் டாற் போலவும் பேச்சினிடையே அந்தப் பேரறிஞர்களின் திருவாக்குகள் வந்து சுவை ஊட்டும்.

சிறந்த நினைவாற்றல் உடையவர்கள் கேட்டதை உடனுக்குடன் நினைவில் பதித்துக் கொள்வார்கள். ஒரு முறை சொன்னாலும் உடனே அதை உள்ளத்தில் பதித்துக் கொள்பவர்களை ஏகசந்தக்கிராகிகள் என்று சொல்வார்கள்.

ஒரே சமயத்தில் பலவற்றைக் கவனித்து மனத்தில் நிறுத்துபவர்கள் பின்னும் சிறப்புடையவர்கள். அவ்வாறு கவனத்தில் வைத்து வெளிப்படுத்தும் ஆற்றலை அவதானம் என்று சொல்வார்கள். ஒரே சமயத்தில் பலவற்றைக் கேட்டு அவற்றை மீட்டும் சொல்லும் அவதானத் திறமை மிக மிகச் சிலருக்கே வாய்க்கும். ஒருவருக்குக் கவியை விளக்குவது, ஒருவர் கொடுத்த கணக்கைப் போடுவது, வருஷம் மாதம் தேதி முதலியவற்றைச் சொல்ல அந்த நாள் இன்ன கிழமை என்று சொல்வது, முதுகில் சிறு சிறு பரல்களை ஒருவர் போட்டுக் கொண்டே இருக்க அவற்றை எண்ணுவது ஆகிய பலவற்றை ஒருங்கே அறிந்து நினைவில் வைத்துக் கொண்டு வெளிப்படுத்தும் அவதானிகள், வட மொழியிலும் பிறமொழிகளிலும் வல்ல புலவர்களில் சிலர் இருந்திருக்கிறார்கள்; காளமேகம் அவ்வாறு அவதானம்

செய்வதில் சிறந்தவர். எட்டு வகையான செய்திகளை ஒரே சமயத்தில் உணர்ந்து சொல்லும் அவதானியை அஷ்டாவதானி என்பர். இப்படியே தசாவதானம், சதாவனம் என்று பல அவதானங்களைச் செய்வதுண்டு. சோடசாவதானிகளும் உண்டு.

இந்த அவதானக்கலையும் தமக்கு அருளவேண்டும் என்று வேண்டுகிறார், குமரகுருபரர் முனிவர்.

சொல்விற்பனமும் அவதானமும்.

வாக்கு வன்மை உடையவர்கள் பேச்சை அவையில் உள்ளவர்கள் கேட்டு அப்போதைக்கு மகிழ்ச்சி பெறுவார்கள். அவதானம் செய்பவர்களின் ஆற்றலையும் அவையினர் கண்டும் கேட்டும் அந்த நேரத்தில் மட்டும் இன்புறுவார்கள். புலவர் அவ்வப்போது பேசினாலும் அவதானம் செய்தாலும் அந்த நேரத்தோடு நின்றுவிடும். அவையினர் சில காலம் அவற்றை நினைந்து பாராட்டிக் கொண்டிருப்பார்கள். காற்றோடு போய்விடும் பேச்சை நெடுநாள் நினைத்துக் கொண்டிருக்க முடியாது. அவதானமும் அத்தகையதே. ஒருவர் மிக அழகாகப் பேசுகிறார். அதைக் கேட்டவர்கள் மகிழ்கிறார்கள். பேச்சு நிகழ்ந்த காலத்துக்குப் பிறகு, கேட்டவர் அதைப்பற்றி வேறு ஒருவரிடம் எடுத்துச் சொல்லும்போது, அந்தச் செய்தியைக் கேட்டவருக்கு, நேரே கேட்டவருடைய இன்பம் இராது. பல காலத்துக்குமுன் ஒருவர் பேசிய பேச்சைப் பிற்காலத்தில் முழுவதும் நினைத்துப் பார்க்க இயலாது. கேட்டவர்க்கன்றி மற்றவர்களுக்கு அந்த அநுபவமும் இராது. அவதானம் செய்பவர்களைப் பார்த்தவர்கள் அடையும் வியப்பும் இத்தகையதே; சில காலம் நின்று பிறகு மறைந்துபோம். பிறர் அதை நன்கு உணர்ந்து வியப்படைய முடியாது. "இத்தனை அவதானங்கள் செய்தார்" என்று அவையில் இருந்து அநுபவித்தவர் சொன்னாலும் கேட்கிறவர்கள்

அதை அப்படியே நம்பமாட்டார்கள். ஆகவே, வாக்கு வன்மையும் அவதானமும் ஒருவகையில் நன்றாக மலர்ந்து மணம் பரப்பி உதிர்ந்துவிடும் மலருக்கு ஒப்பானவை என்று சொல்லலாம்.

ஆனால் கவிதை அத்தகையது அல்ல. ஒரு கவிஞன் கவிபாடினால் அது அந்த நேரத்தோடு நின்று விடுவதில்லை. பாட்டை ஏட்டில் எழுதிப் பாதுகாப்பார்கள். அதை வேறு காலத்திலும் உள்ளவர்கள் கற்று இன்புற முடியும். அதைப் பாடிய புலவன் மறைந்தாலும் அது மறைவதில்லை. அதனால் தான் குமரகுருபரர்,

“மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல், மாயா, புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு”

என்று பாடுகிறார். ஔவைப்பாட்டியும், “என்றும் கிழியாது என் பாட்டு” என்றாள்.

மலர் உதிர்ந்து பிறகு பழம் உண்டாகி அதில் வித்து உண்டானால் அது பலகாலும் இருக்கும். சத்துள்ள வித்தைப் போன்றது கவிதை. குமரகுருபர முனிவர் காசியில் பாதுஷாவுடன் பேசினார். அந்த மன்னன் உள்ளம் குளிரத்தான் பேசியிருப்பார். சொல்விற்பனத்துடனே பேசியிருப்பார். ஆனால் அப்போது அவர் என்ன பேசினார் என்று இப்போது நாம் அறிய முடியவில்லை. அது காற்றோடு போய்விட்டது. ஆனால் அவர் பாடிய பாடல்கள் இன்றும் இருக்கின்றன; ஏட்டோடு வழி வழியாகத் தமிழ் மக்களால் பாதுகாக்கப்பெற்று நம்மளவும் வந்திருக்கின்றன; இனியும் அவை வாழ்ந்து கற்போர் உள்ளம் களிக்க நிலவும்.

வாக்கு வன்மையும், அவதானக்கலையும் கவிதையின் பயனாக வரும் அருமையான வித்தைகளே. என்றாலும் கவி பாடும் ஆற்றலை நோக்கினால் அவை சற்றே தாழ்ந்து விடுகின்றன. அதனால் அவை பயன் அற்றவை என்று சொல்லி

விட முடியாது. அந்த அந்த வேளையில் உண்ணும்போது சுவை தந்து பசியைப் போக்கும் உணவு போன்றவை அவை. கவியோ எல்லாக் காலத்திலும் நெல்லை விளைவித்து அவ்வப் போது வேண்டிய உணவைச் சமைத்துக் கொள்ள உதவும் விளை நிலம் போன்றது.

"எனக்கு இப்போது பசி போகச் சோறு இடு. இனிப்புப் பண்டமும் பாயசமும் சேர்ந்த விருந்தை வழங்கு" என்று கேட்டவன் பிறகு, "என்றைக்கும் நின்று பயன் தரும் நிலத்தை வழங்கு" என்று கேட்பதைப்போல முனிவர் சகல கலாவல்லியை வேண்டுகிறார். முதலில், "சொல்விற்பனம் அருள்" என்றார்; பிறகு, "அவதான ஆற்றலை வழங்கு" என்றார்; மூன்றும் முறையாக, "கவி சொல்லும் கலைத் திறமையைத் தந்தருள்" என்று கேட் கிறார். ஒரு முறைக்கு மூன்று முறை என்று சொல்வது வழக்கம். முனிவரும் இது தா, அது தா என்று கேட்டவர் கடைசியாக, மூன்றாவது முறையாக, நெடுங்காலம் நிற்கும் வரத்தை வேண்டுகிறார்.

*சொல்விற்பனமும் அவதானமும் கவி சொல்லவல்ல*
*நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்*

என்பது அவருடைய வேண்டுகோள். கவி சொல்லும் ஆற்றலை நல்வித்தை என்று சிறப்பிக்கிறார். இந்த மூன் றையும் பெற்று விட்டால் கலைமகளுக்கு அடிமையாகி விட லாம். உண்மையாகக் கலைமகளின் திருவருள் பரிபூரண மாக வாய்த்தால் இப்படி மூன்று கலைகளிலும் வல்லவர் களாக இருப்பார்கள். பழுத்த தமிழ்ப் புலமை அது. 'வாணிதாசர், கலைமகளின் அடிமை' என்று அவர்கள் விலாசம் போட்டுக் கொள்ளலாம். "இந்த மூன்றையும் தந்து உனக்கு அடிமையாக்கிக் கொள்ள வேண்டும்" என்று குமரகுருபர முனிவர் வேண்டுகிறார்.

இனிக் கலைமகளின் புகழை விரிக்கிறார்;

தாமரை மலரில் வீற்றிருக்கும் தேவியர் இருவர். செந் தாமரையில் திருமகளும் வெண்டாமரையில் கலைமகளும் எழுந்தருளி யிருக்கிறார்கள். திருமகளைத் தாமரையாள் என்று சொல்வது வழக்கம். பொதுவாகத் தாமரையில் வீற்றிருப்பவள் என்றால் அது திருமகளைத்தான் குறிக்கும். கமலாசனி என்று ஒரு பெயரே திருமகளுக்கு அமைந்திருக் கிறது. நளினாசனம் சேர் செல்வி அவள்.

திருமகள் செல்வத்தை வழங்கும் பெருமாட்டி. செல்வம் நிலையாக நிற்பதன்று. "ஆறிடு மேடும் மடுவும் போலாஞ் செல்வம்" என்று கேட்டிருக்கிறோம் அல்லவா? அழிந்து போகும் செல்வத்தை நல்கும் பிராட்டி திருமகள். பொருட் செல்வத்தினும் சிறந்தது கல்விச் செல்வம். அது ஒருகாலும் அழியாது; பிறவிதோறும் தொடர்ந்து வருவது. "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு, எழுமையும் ஏமாப் புடைத்து" என்று திருவள்ளுவர் சொல் கிறார். செல்வம் அழியும்; திருடர் பயத்தை உண்டாக்கும்; பிறரால் கொள்ளப்பட்டால் குறைந்து போகும். அத் தகைய குறைபாடுகள் கல்விச்செல்வத்துக்கு இல்லை.

"வெள்ளத்தால் அழியாது;
வெந்தழலால் வேகாது; வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது;
கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவு றாது;
கள்ளர்க்கோ பயம்இல்லை; காவலுக்கு
மிகஎளிது; கல்வி என்னும்
உள்ளத்தே பொருள்இருக்க உலகெல்லாம்
பொருள்தேடி உழல்கின் றாரே"

என்ற பழம்பாடல் இந்த வேறுபாட்டை நன்கு விளக்கு கிறது. இப்படி உள்ள அழியாச் செல்வத்தைத் திருமகளால் அளிக்க இயலாது; நளினாசனம் சேர் செல்விக்கு அது

அரிது; ஒருகாலமும் சிதையாமல் இருக்கும்படியான கல்விச் செல்வத்தைப் போன்ற பேறு வேறு இல்லை.

> ''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;
> மாடல்ல மற்றை யவை''

என்று திருவள்ளுவர் ஆணித்தரமாகச் சொல்கிறார். செல்வத்தை நிலையாதது என்று வெறுப்பவர்கள் முனிவர்கள். ஆனால் கல்விச் செல்வத்தையும் ஞானத்தையும் விரும்புவார்கள். தாம் ஈட்டிய பொருளையெல்லாம் ஒருங்கே துறந்த பட்டினத்துப்பிள்ளையார் கல்விச் செல்வத்தைப் பெற்றிருந்தார்: கவி சொல்ல வல்ல நல்வித்தையையும் பெற்றிருந்தார். கலைமகள் இந்தப் பேற்றைத் தருகிறவள். இதைச் சொல்கிறார் குமர குருபரர்,

> நளினாசனம்சேர்
> செல்விக்கு அரிது என்று, ஒரு காலமும்
> சிதையாமை நல்கும்
> கல்விப் பெருஞ்செல்வப் பேறே,
> சகல கலாவல்லியே!

என்று கலைமகளையும் திருமகளையும் ஒப்பு நோக்கிக் கலைமகளின் சிறப்பைப் புலப்படுத்துகிறார். கல்வியே பெருஞ் செல்வம்; அதைப் பெறுவது பெரிய பேறு. அந்தப் பெரும் பேறாக எழுந்தருளியிருப்பவள் சகல கலாவல்லி. அந்தச் செல்வத்தை உடையவளிடம், அழியும் செல்வத்தையா கேட்பது? வற்றாத கல்விச்செல்வப் பேறாக இருக்கும் அன்னையைப் பார்த்து, அந்தக் கல்வியின் விளைவுகளாகிய வாக்கு வன்மை, அவதானத் திறமை, கவித்துவம் என்னும் மூன்றையும் வேண்டுகிறார்.

> சொல்விற் பனமும் அவதான
> முங்கவி சொல்லவல்ல
> நல்வித்தை யுந்தந்து அடிமைகொள்
> வாய், நளி னாசனம்சேர்

செல்விக்கு அரிதென்று ஒருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே,
சகல கலாவல்லியே !

[செந்தாமரையாகிய இருக்கையில் வீற்றிருக்கும் திருமகளுக்கு அளிப்பதற்கரியது என்று எண்ணி, ஒரு காலத்திலும் அழியாமல் இருக்கும்படி வழங்கும் கல்வியாகிய பெருஞ் செல்வப் பேறாக விளங்கும் சகல கலாவல்லியே, அவையில் கற்றவற்றை எடுத்துரைக்கும் சொல் திறமையையும், அவதானக் கலையையும். கவிதையை நினைத்தபோது சொல்லவல்ல நல்ல கலையையும் அடியேனுக்கு அருளி என்னை நின் தொண்டனாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

விற்பனம்—அறிவுத்திறமை. நளினாசனம்—தாமரைத் தவிசு; தீர்க்க சந்தி. செல்வி—திருமகள். சிதையாமை—சிதையாமல்.]

திருச்செந்தூர் ஆண்டவனிடம் இவ்வாறே விண்ணப்பித்துக் கொண்டவர் இம்முனிவர்.

“ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும் — ஓசை
எழுத்துமுத லாம்ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து”

அருளவேண்டும் என்று கந்தர்கலி வெண்பாவில் வேண்டினார்.

அரசனுடைய அருளைப் பெற்றவர் உரிய காரியத் தலைவரிடமும் தம் விருப்பத்தைச் சொல்லி நலம் பெறுபவரைப் போல இந்த வேண்டுகோளைக் கலைமகளிடமும் விடுக்கிறார்.

இந்தப் பாடல் சகல கலாவல்லிமாலையில் உள்ள எட்டாவது பாடல்.

# மெய்ஞ்ஞானத்தின் தோற்றம்

ஓர் எழுத்தோ பல எழுத்துக்களோ சேர்ந்து பொருளைத் தந்தால் அதற்குச் சொல் என்று பெயர். கடிடி, மிணுணு என்பவை எழுத்துக்கள் சேர்ந்த சேர்க்கை ஆனாலும் அவற்றிற்குப் பொருள் இல்லாமையால் அவை சொல் ஆவதில்லை. ஆகவே ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் உண்டு; ''எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே'' என்று இலக்கணம் கூறும்.

சில சொற்கள் சேர்ந்தால் அதற்குச் சொற்றொடர் என்று பெயர். அந்தச் சொற்றொடருக்கு, அவற்றின் இணைப்பினால் ஒரு பொருள் தோன்றவேண்டும். இல்லை யானால் அவை சொற்றொடர் ஆவதில்லை. 'மாடுகள் குன்று சிறிது' என்ற தொடரில் மூன்று சொற்கள் உள்ளன. என்றாலும் அவற்றின் இணைப்பினால் எந்தப் பொருளும் தோன்றவில்லை. அவற்றில் ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனியே பொருள் இருந்தாலும், அந்த மூன்றின் சேர்த்தியினால் எந்தப் பொருளும் தோன்றவில்லை. பொருள் தொடர்பு இல்லாமையால் அவை சேர்ந்து தொடர்ந்து நின்றாலும் சொற்றொடர் ஆவதில்லை.

ஆகவே, தனிச் சொற்களுக்குத் தனித்தனியே பொருள் இருந்தாலும் எல்லாச் சொற்களும் இணைந்த இணைப்பாலே ஒரு பொருள் அமைந்தால்தான் அது பொருளுடைய சொற்றொடராகும். இதனால், சொல்லுக்கும் சொற் பொருளுக்கும் அப்பால் தொடருக்கு ஒரு பொருள் இருக்க வேண்டும் என்பது புலனாகும்.

என்னிடம் ஓர் அன்பர் வந்தார். "ஐயா, ஒரு புலவர் கம்பராமாயணத்தில் விடணன் அடைக்கலப் படலம் சொன்னார்; நன்றாக இருந்தது. உடனே கம்பராமாயணப் புத்தகம் வாங்கினேன். படிக்கத் தொடங்கினேன். அவர் சொன்ன பாடல்களைத் தவிர மற்றவற்றிற்குப் பொருள் விளங்கவில்லை. என்ன செய்வது?" என்றார்.

"ஓர் அகராதி வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னேன்.

"கம்பராமாயணச் சொற்கள் எல்லாம் அதில் இருக்குமா?" என்றார்.

"இருக்கும்" என்றேன்.

சிலகாலம் கழித்து மறுபடியும் அந்த அன்பர் வந்தார். "ஒரு சொற்பொழிவாளர் ஒரு நாள் வில்லி பாரதத்திலுள்ள கிருஷ்ணன் தூதை விரிவுரை ஆற்றினார். நன்றாக இருந்தது. வில்லிபாரதம் புத்தகம் வாங்கினேன். அதைப் படிக்கும்போது பலவற்றிற்குப் பொருள் தெரியவில்லையே!" என்றார்.

"அகராதியைப் பாருங்கள்" என்றேன்.

"எல்லாச் சொல்லுக்கும் பொருள் இருக்குமா?" என்று கேட்டார்.

"நிச்சயம் இருக்கும்" என்றேன்.

பின் ஒரு நாள் அந்த அன்பர் வந்து இப்படியே கந்த புராணத்தைப் பற்றிக் கேட்டார். "அகராதி வாங்கிப் பாருங்கள்" என்றேன். பெரிய புராணம், திருவிளையாடல் என்ற புத்தகங்களைப் படிக்க விரும்பி, பொருள் தெரிந்து கொள்ள வழிகேட்டார். "அகராதி வாங்கி வைத்துக் கொண்டு பாருங்கள்" என்று சொன்னேன்.

மறுபடியும் அவர் ஒரு நாள் வந்தார். "கம்பராமாயணச் சொற்கள் எல்லாம் அகராதியில் இருக்கும் அல்லவா?" என்றார்.

''ஆம்'' என்றேன்

''வில்லிபாரதத்துக்கு அகராதி துணைசெய்யும் அல்லவா ?'' என்றார்.

''ஆம்'' என்றேன்.

''பெரியபுராணத்தில் இருக்கும் எல்லாச் சொற்களும் அகராதியால் விளங்கும் அல்லவா ?'' என்று கேட்டார்.

''ஆம்'' என்றேன்.

''எல்லா நூல்களில் உள்ள சொற்களும் அகராதியில் இருக்குமானால் நான் அகராதியையே படித்துவிடுகிறேனே !'' என்றார்.

எனக்குச் சிரிக்கிறதா, அழுகிறதா என்று தெரியவில்லை.

எல்லாச் சொற்களும் அவற்றின் பொருள்களும் அகராதியில் இருக்கும் என்பது உண்மைதான். ஆனால் அகராதி அந்த நூல்கள் ஆகுமா ? சொற்களின் இணைப்பிலே உண்டாகும் தொடர்பொருளும் அதனால் விளையும் சுவையும் அகராதியிலே கிடைக்குமா ? செங்கற்குவியல் வீடானால் அகராதியும் காவியமாகும்.

இதனால் என்ன தெரிகிறது? வெறும் எழுத்துச் சேர்க்கை பொருள் தராவிட்டால் எப்படிச் சொல் ஆவதில்லையோ, அப்படியே தொடர்ந்த பொருள் இல்லாவிட்டால் வெறும் சொற்களின் சேர்க்கை சொற்றொடர் ஆவதில்லை; எனவே, சொல்லுக்கும் பொருளுக்கும் அப்பால் வாக்கியம் அல்லது சொற்றொடருக்குத் தனியே ஒருபொருள் அல்லது கருத்து இருக்கிறது. அவ்வாறே பொருள் தொடர்பு இல்லாத பல வாக்கியங்கள் இருந்தாலும் அவற்றின் சேர்த்தியால் ஒரு பயனும் விளையாது. 'கத்தரிக்காய் காம்புடையது, முடவன் நடக்கமுடியாது, சிவபெருமான் பரம்பொருள், ஏனடா அழுகிறாய்' என்றுள்ள வாக்கியங்களுக்குத் தனித் தனியே

பொருள் இருந்தாலும், அவற்றின் இணைப்பிலே இரண்டா பொருள் ஏதும் கிடைப்பதில்லை.

சொற்றொடருக்கும் வாக்கியச் சேர்க்கைக்கும் உள்ள தொடர் கருத்து அல்லது பிழம்புப்பொருள் ஒன்று இருக்க வேண்டும் என்பதை இவற்றால் உணர்ந்து கொள்ளலாம். ஆகவே பனுவல்களில் சொல் இருக்கிறது; பொருள் இருக் கிறது; அவற்றிற்குமேலே சொற்றொடர்ச் சேர்க்கையினால் தோன்றும் கருத்து இருக்கிறது. இந்தக் கருத்தின் சிறப் பினால் பனுவல் பெருமை பெறுகிறது.

அந்தக் கருத்துக்கு ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு தொடரும் அவற்றால் தனித்தனியே புலப்படும் பொருளும் உறுப்புக்களாக அமைகின்றன. அந்தக் கூட்டினால் உண் டாகும் பொருளே பனுவலுக்கு உயிராக அமைகிறது. வெவ்வேறு செயலைச் செய்யும் உடலின் உறுப்புகள் எல்லா வற்றினூடும் உயிர் அமைந்து தொடர்பு படுத்துவது போல, அந்தக் கருத்து அல்லது அறியப்படும் பொருள் இருக்கிறது. அதையே அறிவு அல்லது ஞானம் என்று சொல்லலாம்.

சொல்லின் பொருளைத் தெரிந்து கொள்வதற்குமேல் நூலின் முழுமையிலும் அமைந்ததைத் தெரிந்து கொண் டால் நமக்கு நூலறிவு உண்டாகும்; அதைப் பெறுவதுதான் மொழியின் பயன். அத்தகைய அறிவிலும் உண்மையும் உறுதியும் உள்ளதாக இருப்பது சிறந்தது. அறிவு, உணர்வு ஆகியவற்றைப் பல வாக்கியங்களின் கோவையால் பனுவல் கள் நமக்கு ஊட்டுகின்றன.

நூல்களைப் படிப்பதனால் உண்டாகும் இந்த விளைவை மெய்ஞ்ஞானம் என்று குமரகுருபரர் கூறுகிறார். வெறும் எழுத்திலே அது கிடைப்பதில்லை; ஆனாலும் எழுத்து இன்றி யமையாதது. வெறும் சொற்பொருளிலே அந்த ஞானம் கிடைப்பதில்லை. ஆனாலும் பொருள் இன்றியமையாதது. வெறும் சொற்றொடராலே அந்த உயிர் புலப்படாது;

என்றாலும் சொற்றொடர் இல்லாமல் மெய்ஞ்ஞானம் உண்டாகாது.

சொல், பொருள் ஆகிய இரண்டும் மெய்ஞ்ஞானத்துக்கு உடம்புகள் போன்றவை. உயிர் இருந்து தொழிற் படுவதற்குப் பருவுடல், நுண்ணுடல் என்ற இரண்டும் இன்றியமையாதவை. உயிர் இல்லா விட்டால் அந்த உடல் களால் பயன் ஏதும் இல்லை. அவ்வாறே, பருவுடலைப் போலச் சொல்லும், நுண்ணுடலைப் போலப் பொருளும், உயிரைப் போல மெய்ஞ்ஞானமும் இருக்கின்றன.

சொல்லை அறிவது ஒரு வகை அறிவுதான். ஒலியினால் இதை அறிகிறோம். காது தெளிவாகக் கேட்டால் சொல்லை அறிந்து கொள்ள முடியும். ஆங்கிலமே தெரியாத ஒரு வனிடம் ஓர் ஆங்கிலச் சொல்லைச் சொன்னால் அந்தச் சொல்லை அவன் ஒலிவடிவால் தெரிந்து கொள்வான். ஆனால் பொருள் தெரியாது. அதாவது அவனுடைய செவிப் புலனுக்கு மட்டும் அது தெரிகிறதே யன்றி மனத்துக்கு விளங்குவதில்லை.

காதும் கருத்தும் உள்ளவன் சொல்லையும் பொருளையும் தெரிந்து கொள்ளலாம். அவற்றிற்குமேல் 'ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம்' காண்பதற்கு, 'சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கு'வதற்கு, சொல்லுக்கும் பொருளுக்கும் உயிரான மெய்ஞ்ஞானத்தை உணர்வதற்கு, தனி ஆற்றல் வேண்டும். அந்த ஆற்றலையே நுண்ணுணர்வு, பிரதிபை, மேதை என்றெல்லாம் சொல்வார்கள். அந்த உணர்வாக, மெய்ஞ்ஞானமாக நிற்பவள் கலைமகள். அதாவது கலைமகள் அருள் இருந்தால் அந்த மெய்ஞ்ஞானம் கைவரும். வேறு வகையில் சொன்னால், பனுவல்களின் உயிராகிய ஆழ்ந்த மெய்ஞ்ஞானத்தை உணருகிறவன் கலைமகளையே தரிசனம் செய்தவனாகிறான்.

கலைமகளை விக்கிரக வடிவத்திலே காண்பது உண்மை யான கலைமகள் தரிசனமாகாது. நூலின் ஆழத்தில்

புதைந்து கிடக்கும் மெய்ஞ்ஞானம் கிடைக்குமானால் உண்மையான கலைமகளைத் தரிசித்ததாக ஆகும். அதனால், "புத்தகத் துள்ளுறை மாதே" என்று ஒரு பழைய துதி சொல்கிறது.

இவற்றை யெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்படி கலைமகளைப் பற்றிப் பாடுகிறார் குமரகுருபரர்.

> சொற்கும் பொருட்கும் உயிராம்
> மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன
> நிற்கின்ற நின்னை

என்று தொடங்குகிறார்.

காதுடையவர்கள் சொல்லைக் கேட்டு உணரலாம். கண் உடையவர்கள் பார்த்துப் படிக்கலாம். ஆனால் கருத்து உடையவர்களே பொருளை உணர முடியும். அதற்குமேல் ஜீவனாக உள்ளதைத் தெரிந்து கொள்ளக் கலைமகள் அருள் வேண்டும். அது எல்லாருக்கும் கிடைக்காது; அதைப் பெறுகிறவர்கள் அருமையாகவே இருப்பார்கள். கலைமகள் அந்த மெய்ஞ்ஞானத்தின் தோற்றமாக நிற்பதை யாவருமா உணர்கிறார்கள்?

> சொற்கும் பொருட்கும் உயிராம்
> மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன
> நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?

என்று அந்த அருமைப் பாட்டை எண்ணிக் கேட்கிறார் முனிவர்.

இது கலைமகளின் நுட்பமான உருவம்; கலைமகளின் உயிர். இதையே பருப்பொருளாகக் காட்டிப் பெரியோர்கள் வணங்கச் செய்கிறார்கள். தெய்வங்களின் வடிவங்கள் யாவும் உள்ளுறையை உடையன; நுண்பொருளுக்குரிய சின்னமாக விளங்குவன. கலைமகளின் வடிவமும் அத்தகையதே. அந்தப் புறவடிவத்தை அடுத்து நினைக்கிறார் முனிவர்.

சகல கலாவல்லி நடக்கிறாள். அவள் நடப்பதனால் கவிதை நடக்கிறது. இலக்கியம் நடக்கிறது. பெண்ணுக்கு நடை அழகு; அது போலவே இலக்கியத்துக்கும் நடை அழகு உண்டல்லவா? கலைமகள் நடக்கிறாள் என்றால் நூலும் நல்ல நடை போடும்.

பொதுவாகப் பெண்களின் நடைக்குப் பிடியின் நடையையும் அன்னத்தின் நடையையும் உவமை கூறுவது வழக்கம். இரண்டு நடைகளிலும் மென்மை இருக்கும். கலைமகள் நடக்கிறாள். அந்த நடை பிடியின் நடைபோல இருக்கிறது என்று சொல்வது சிறப்பன்று. மிகச் சிறந்த நல்ல பெண்யானை, தன் நடை பிற பெண்களை நோக்க நன்றாக இருந்தாலும் கலைமகளைப் பார்க்கும்போது தன் நடைக்கு அந்த அழகு வரவில்லையே என்று நாணுமாம். நல்ல பிடிக்குத் துதிக்கை நீண்டிருக்கும்; நிலத்திலே வந்து படியும். "நிலந்தோய் புழைக்கை நற்குஞ்சரத்தின் பிடி" என்று அதைச் சொல்கிறார் முனிவர். "ஈர்ந்து நிலந்தோயும் இரும்பிடித் தடக்கை" என்று சிறுபாணாற்றுப் படையில் வருகிறது. அப்படிக் கையால் பெருமை பெற்றதாயினும் அந்தப் பிடியின் காலுக்குச் சிறப்புப் போதாது. அது காலால் நடக்கும் நடை கலைமகளின் நடைக்கு முன் விளக்கம் பெறுவதில்லை. இதை அறிந்து அது நடக்க நாணுகிறதாம். மற்றப் பெண்களின் நடைக்கு முன்னே, "என் நடையைத்தான் உங்கள் நடைக்கு உவமை கூறு கிறார்கள் புலவர்கள், உவமையாக வருவதற்குத்தான் உயர்வு. ஆகையால் என் நடையே உயர்ந்தது" என்று இறுமாக்கும் நற்குஞ்சரத்தின் பிடி, கலைமகள் நடையைக் கண்டு அந்த இறுமாப்பு அடங்கி, நாணிக் கோணிக் கொள்கிறதாம்.

அன்னங்களில் சிறந்தது அரசன்னம். அதன் வடிவமே மிக அழகியது. அதுகூடக் கலைமகளுக்கு முன் நடக்க நாணி நிற்கிறதாம்,

நிலம் தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண.

கலைமகள் நடை ஒரு காலைக்கு ஒருகால் புதிது புதிதாக இருக்கிறது. புதிது புதிதாக நடனம் கற்றுக் கொண்டு வரும் ஆடற் பெண் ஒருத்தி ஒவ்வொரு நடனத்திலும் புதுமையைக் காட்டுவது போல, கலைமகள் நடக்கும் ஒவ்வொரு முறையும் புதிய நடையழகு தோற்றுகிறது. காலத்துக்குக் காலம் இலக்கிய நடை புதுமை பெற்று வருவது போலக் கலைமகள் நடையும் அமைகிறது. அவள் ஒவ்வொரு நடையிலும் புதிதாகக் கற்ற நடையைக் காட்டுவது போல இருக்கிறது. மேலும் மேலும் கற்றுவரும் புலவனுடைய பேச்சிலே அவனுடைய நூலறிவு புதிது புதிதாக வெளிப்படுவது போல, இந்த நடையின் அழகு வெளிப்படுகிறது.

கலைமகளின் பாதாம்புயம் பார்ப்பதற்கே அழகு நிரம்பியிருக்கும். அதன் தண்மையும் வண்ணமும் எழிலும் கண்டு தானே அதை அம்புயம் என்று சொல்கிறோம்? நீரில் உள்ள அம்புயம் பார்க்க அழகாக இருக்கிறது. ஆனால் அது நடக்காது. இந்தப் பாதாம்புயம் நடக்கிறது; ஒருகாலைக்கு ஒருகால் புதிய நடையைக் கற்றதுபோலப் புதுமையைக் காட்டுகிறது. தோற்றம் ஓர் அழகு. நடை பின்னும் அழகியது. காலுக்குப் பெருமை வடிவத்தில் மட்டும் அமைவதல்லவே! அது நடந்தால்தானே காலாகும்?

சகல கலாவல்லியின் பாத தாமரை நடை கற்கிறதாம். அப்படி நடை கற்கும் தாயைப் பாடுகிறார் முனிவர்.

நிலம்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே.
சகல கலாவல்லியே!

மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் கலைமகளின் நுண்ணிய வடிவு. நடை கற்கும் தோற்றம் புறவடிவு. இரண்டையும் ஒருங்கே கண்டு வழிபடுகிறார் குமரகுருபரர்.

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
　　ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
　　யார்? நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
　　அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே,
　　சகல கலாவல்லியே !

[நினைப்பவர் யார் :. அரியர் என்ற படி. புழைக்கை— துவாரம் உள்ள கை; துதிக்கை. 'பதாம் புயத்தாளே' என்பதும் ஒரு பாடம்.]

இது சகல கலாவல்லி மாலையில் வரும் ஒன்பதாவது பாட்டு.

# வேண்டுகோள்

ஸ்ரீ குமரகுருபர முனிவர் காசிக்குச் சென்று சில காலம் தங்கினார். கங்கைக்கரை அவர் உள்ளத்தை ஈர்த்தது. காவிரிக் கரையில் வளர்ந்துள்ள நாகரிகத்தையும் சைவ உணர்வையும் தமிழ்ச் சுவையையும் கங்கைக்கரையில் பரப்பவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். அங்கே நிலையாகத் தங்கவேண்டுமானால் தமக்கே உரிய இருக்கை ஒன்று வேண்டும். இல்லறத்தார் வாழும் இடங்களில் தங்குவது முறையன்று. தனியாக ஒரு மடம் அமைத்துக் கொண்டால் அங்கே சிவபூஜை, சிவத்தியானம், சமயப்பணி முதலியவற்றைச் செய்யலாம் என்று எண்ணினார்.

குமரகுருபரமுனிவர் காசிக்கு வந்து சில நாள் தங்கியதில், இந்துஸ்தானியில் மற்றவர்கள் பேசுவதை ஒருவாறு புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருந்தார். சில சொற்களை மட்டும் பேசத் தெரிந்து கொண்டார். அந்த அறிவை வைத்துக்கொண்டு எல்லாரோடும் பேச முடியாது. நவாபிடம் சென்று நிலம் வாங்க எண்ணினார். இந்துஸ்தானியை நன்றாகக் கற்கத் தொடங்கினார். மனிதன் செய்யும் முயற்சியில் தெய்வத்தின் திருவருள் துணையிருந்து எளிதில் வெற்றி கிட்டும். ஆகவே மொழிகளுக்கும் எல்லாக் கலைகளுக்கும் தலைவியாகிய சகல கலாவல்லியைத் துதித்துப் பத்துப் பாடல்கள் பாடினார், எளிதில் இந்துஸ்தானியில் இங்கிதமாகப் பேசும் ஆற்றலைப் பெற்றார்; பிறகு நவாபிடம் சென்று பேசி நிலம் பெற்று மடத்தைக் கட்டிக் கொண்டார். இதை முதலிலே பார்த்தோம்.

நவாபைச் சந்திப்பதற்குமுன் அவர் பாடிய சகல கலாவல்லி மாலைப் பாடல்களையே இதுகாறும் பார்த்தோம்.

பத்தாவது பாடலாகிய இறுதிப் பாடலில்தான் குமரகுரு பரர் எதற்காக இந்தப் பாமாலையைப் பாடினாரோ அது இன்னதென்று தெரிந்து கொள்ளும் குறிப்பு இருக்கிறது. அந்தப் பாடலை இப்போது பார்ப்போம்.

குமரகுருபர முனிவர் சகல கலாவல்லியிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கிறார். 'அரசர்களும் என் கவிதை யைக் கேட்டு இணங்கி வரவேண்டும்' என்ற கருத்தை வெளியிடுகிறார். புவியரசர்களும் கவியரசர்களைப் பணிந்து ஒழுகிய வரலாறுகள் பல உண்டு.

அரசர்கள் தம் பதவிக்கு ஏற்பப் பலவகை அடை யாளங்களைக் கொண்டிருப்பார்கள். சிங்காதனம், செங் கோல், கொடி முதலியவை அரசருக்குரிய சின்னங்கள். அவற்றில் முக்கியமானது குடை. குடை உடைமையால் அரசனுக்குச் சத்ரபதி என்ற பெயர் வடமொழியில் வழங்கும். அரசர்கள் கொண்டிருக்கும் குடை அவர்களுக்கு நிழல் தருவதற்காக அமைந்தது அன்று. தம்முடைய நாட்டில் உள்ள குடிமக்கள் எல்லோருக்கும் தீங்கு வராமல் நலம் செய்து நிழல் பரப்பிப் பாதுகாப்பதைக் காட்டுவதே அந்தக் குடை.

"கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே; வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ"

என்று (35) புறநானூறு கூறுகிறது. மன்னனின் மேல் விளங்கும் கவிகை அவருடைய ஆட்சிக்குள் அடங்கிய நாடு முழுவதையும் தன் நிழலின் கீழ் வைத்துப் பாதுகாப்ப தாகச் சொல்வதும் மரபு.

"உலகுடன் நிழற்றிய
தொலையா வெண்குடை"

என்பது (204) அகநானூறு.

அரசர் எடுத்த குடை அவர் ஆளும் நாடு முழுவதிலும் பரவிக் கவிந்து நிற்பது என்று சொல்லும் வழக்கத்தை ஒட்டிக் குமரகுருபரர், ''மண்கண்ட வெண்குடை'' என்று தொடங்குகிறார். அரசர்களின் குடை வெண்ணிறமாக இருக்கும்.

''கொங்கலர்தார்ச் சென்னி
குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்''

என்பது சிலப்பதிகாரம்.

உலகமெல்லாம நிழற்றுவதாகிய வெண்குடையின்கீழ் அரசர் வீற்றிருப்பார். குடையின் கீழே அவர் இருந்தாலும் அவர் பதவி மேம்பட்டது. பல மக்களுக்கும் இறைவராக மேலான நிலையில் இருப்பவர் அவர். அத்தகைய மன்னர்களும் தம்முடைய கவியைக் கண்டு பணிய வேண்டும் என்று சகலகலாவல்லியை வேண்டுகிறார் குமரகுருபரர்.

மண் கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவில் பணியச்
செய்வாய்.

பண் என்றது ஆகுபெயராய்க் கவிதையைக் குறித்தது. கவிதையைக் கண்டவுடனே, ''இவர் பெருங்கவிஞர்'' என்று மதிப்பு வைத்துப் பணியும்படி செய்ய வேண்டும். இசைப்பாடல்களுக்குத் தாளமும் பண்ணும் உண்டு. இயற் பாடலுக்கும் பண் உண்டு; இசையோடு பாடல்களைப் பாடுவது புலவர்களின் வழக்கம். இன்ன இன்ன பாடலை இன்ன ராகத்தில் பாடினால் சிறப்பாக இருக்கும் என்று புலவர்கள் சொல்வதுண்டு. என்னுடைய ஆசிரியப் பிரானாகிய ஐயரவர்கள் வெண்பாவைச் சங்கராபரணத் திலும், ஆசிரியப்பாவை ஆரபியிலும், கட்டளைக் கலித் துறையைப் பைரவியிலும், விருத்தங்களை வெவ்வேறு ராகங் களிலும் பாடுவது சிறப்பு என்று சொல்வார்கள்.

'உலகத்தையே ஆளும் அரசராக இருந்தாலும் என் கவியைக் கண்டு பணிய வேண்டும்' என்ற விருப்பத்தைக் கலைமகளிடம் விண்ணப்பித்துக் கொள்கின்றார் முனிவர். புவியரசரையும் விடக் கவியரசர் அதிக மதிப்பைப் பெறுகிறவர்கள்.

"மன்னனுக்குத்
தன்தேயம் அல்லால்
சிறப்பில்லை; கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு"

என்பது இக்கருத்தைத்தானே சொல்கிறது?

தம் வேண்டுகோளை முன்னால் சொல்லிவிட்டுச் சகலகலாவல்லியின் பெருமையைப் பின்னாலே சொல்கிறார்.

தேவலோகத்தில் பிரமதேவன், இந்திரன் முதலிய தேவர்கள் இருக்கிறார்கள். முப்பத்து முக்கோடி தேவர் என்று ஒரு கணக்கு உண்டு. அந்தத் தெய்வங்களின் குழுவைச் சேர்ந்தவளே கலைமகள். அந்தத் தெய்வங்கள் வெவ்வேறு பணிகளை ஆற்றினாலும் மக்களுக்கு உயர்வைத் தரும் கல்வியை அருள்கிறவள் கலைமகளே. கல்வி கற்றவர்கள் உலகில் மதிப்புப் பெறுகிறார்கள். செல்வம் உடையவர்கள் யாவருமே மதிப்பு அடைகிறார்கள் என்று சொல்வதற்கு இல்லை. உடல் வலிமை உடையவர்கள் யாவருமே பெருமை பெறுகிறார்கள் என்பதும் இல்லை, ஆனால் கல்வியில் வல்லவர்கள் பெரும்பாலும் சிறப்பை அடைகிறார்கள். அவர்கள் கற்ற கல்வி கைமேற் பலன் தருவது. அதனால் அக்கல்வியை அருளும் தெய்வம் கைமேல் பலன் தரும் கண்கண்ட தெய்வம் என்று சொல்வது பொருத்தந்தானே? கண்கண்ட என்றால், அநுபவத்தில் உணர்ந்த என்பது பொருள்.

குமரகுருபரமுனிவர் தம்முடைய கல்வித் திறமையாலும் கவியாற்றலாலும் திருமலைநாயக்க மன்னன் உள்ளத்தையே கவர்ந்தவர். ஆதலின் அந்தக் கல்வித்

திறமையை அருளிய கலைமகள், வாழ்வில், நடைமுறையில் அநுபவத்துக்கு உரிய பெருமையைத் தரும் கண்கண்ட தெய்வம் என்று தெரிந்துகொண்டவர் அவர். எனவே, 'வானுலகத்தில் தேவர்கள் எவ்வளவு கோடிப்பேர் இருந்தால் என்ன ? நீதான் கண்கண்ட தெய்வம்" என்கிறார்.

படைப்போன் முதலாம்
விண் கண்ட தெய்வம் பல் கோடி
உண்டேனும் விளம்பில் உன்போல்
கண் கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே ?

""சிவபெருமான் கண்கண்ட தெய்வம் அல்லவா ? அவரைவிடக் கலைமகள் உயர்ந்தவளாவாளா ? ஒரு சைவர் இப்படிப் பாடலாமா?" என்ற கேள்வி எழலாம். முனிவர், 'தெய்வம் பல்கோடியுண்டேனும்' என்று மட்டும் சொல்லியிருந்தால் அந்தக் குற்றத்துக்கு ஆளாகியிருப்பார். ஆனால் தெய்வங்களை இனம் கண்டு கொள்ள ஓர் அடைமொழி கொடுத்துச் சொல்கிறார். "விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்" என்கிறார். விண் என்பது தேவலோகம். அங்கே உள்ள தேவர்களே இங்கே முனிவர் குறிக்கும் பல்கோடி தெய்வங்கள். சிவபெருமான் 'வானோர்க்கு உயர்ந்த உலகி'ல் இருப்பவன்; கைலாசபதி; வீட்டுலகத்து நாயகன்; தேவர்கோ அறியாத தேவதேவனாகிய மகாதேவன்; வானோர் புகலரிய உயர்ந்த இடத்தில் இருப்பவன். அவனை விண்கண்ட தெய்வக் கூட்டத்தில் சேர்க்கக்கூடாது.

தேவர் இனத்தில் வெவ்வேறு தொழில் செய்பவர்கள் இருக்கிறார்கள். படைப்புத் தொழிலை நடத்தும் பிரமதேவனே இருக்கிறான். ஆனால் அவர்களெல்லாம் ஆற்றும் செயல்களைவிடக் கலைமகள் செய்யும் அறிவுக் கொடை சிறந்தது; மெய்ஞ்ஞானத்துக்கு வழிகாட்டுவது. ஆதலால் அந்தத் தேவியைச் சிறப்பாக வைத்துப் பாராட்டுகிறார் முனிவர்.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவில் பணியச்செய்
வாய்;படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண்
டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ ?
சகல கலாவல்லியே !

[சகலகலா வல்லியே, உலகம் முழுவதும் நிழல் பரப்பிக் கண்ட வெண்மையான குடையின்கீழ் இருந்தாலும் யாவரினும் மேற்பட்டிருக்கும் மன்னர்களும் என்னுடைய கவியை அநுபவித்தவுடன் என்னைப் பணிந்து ஆவன செய்யும் படி திருவருள் பாலிக்கவேண்டும்; உலகத்தைப் படைக்கின்ற பிரமதேவன் முதலாகிய தேவலோகத்திற் கண்ட தேவர்கள் பல கோடி இருந்தாலும், நல்ல சிறப்பைத் தரும் தெய்வம் என்று தேர்ந்து சொல்லப் புகுந்தால், உன்னைப் போலப் பிரத்தியட்சமாகப் பயன் கொடுக்கும் தெய்வம் உண்டா ?

மண் - நிலவுலகம். கண்ட - எங்கும் பரந்து கவித்து நிழற்றிக் கண்ட. மன்னரும் : உம்மை உயர்வுசிறப்பு. உலகம் முழுவதையும் ஆளும் மன்னராக இருந்தாலும் தம்மைப் பணியவேண்டும் என்று வேண்டுகிறார். நவாபுடன் பேசி அவரைத் தம் வேண்டுகோளுக்கு இணங்கச் செய்ய வேண்டும் என்று பாடிய பாமாலை இது. இரு ப் பாட்டில் அந்தக் குறிப்பு இருக்கிறது. உலகம் முழுதும் ஆளும் மன்னரே வணங்கும் நிலை வந்துவிட்டால் நவாபு வணங்குவது பெரிய காரியமா ? கலைமகளிடம் விண்ணப்பம் செய்யும் போது சிறியதையா வேண்டுவது ? "பெரிதினும் பெரிது கேள்" என்று பாரதியார் பாடுவார். பெரியதாகக் கேட்டுப்

பெற்றுவிட்டால் மற்றவையெல்லாம் அதற்குள் அடக்கந் தானே ?

பண்—கவி; ஆகுபெயர். கண்ட அளவில் என்பன தொகுத்தல் விகாரத்தால் கண்டளவில் என இணைந்தன. கண்ட - நுகர்ந்த; எழுதிக் கொடுத்த பாட்டைப் பார்த்தவுடனே என்றும் சொல்லலாம். விண் - தேவருலகம். விண்ணிற் கண்ட. பல் கோடி - பல கோடி; முப்பத்து மூன்று கோடி தேவர்கள் என்பது வழக்கு. விளம்பில் - உண்மையைச் சொல்லப்புகுந்தால். கண்கண்ட - அநுபவத்தில் பயன் பெற்று உணர்ந்த. உளதோ என்ற வினா இல்லை என்ற கருத்தை அடக்கியது.]

இந்தப் பாட்டில் சகலகலாவல்லி மாலையைப் பாடுவதற்குரிய காரணம் இன்னதென்று புலப்படுகிறது.

இது சகலகலாவல்லி மாலையில் பத்தாம் பாட்டாகிய இறுதிப் பாடல்.

# கலைமகள் துதிகள்

1. சிந்தா தேவி, செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே, நாமிசைப் பாவாய்,
வானோர் தலைவி, மண்ணோர் முதல்வி,
ஏனோர் உற்ற இடர்களைவாய்,
(மணிமேகலை, 14: 17-20.)

2. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள், என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள்; இங்கு வாரா திடர்.

3. படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடிஇடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி ?

4. பொத்தகம், படிக மாலை
குண்டிகை, பொருள்சேர் ஞான
வித்தகம் தரித்த செங்கை
விமலையை அமலை தன்னை

---

1. கலைநியமம் - கலைக்கோயில். ஏனோர் - பிறர்.
2. ஏய = பொருந்த, உருவம் பளிங்குபோல வெண்மையாக இருப்பவள்.
3. கடி - மணம். துடி - உடுக்கை. அனவரதமும் - எப்பொழுதும்.
4. குண்டிகை - கமண்டலம். வித்தகம் - முத்திரை. கொந்து அளகபாரம் - பூங்கொத்துக்களை அணிந்த கூந்தல். முகிழ் - அரும்பு போன்ற. தவளமேனி - வெண்மையான நிறம், மைத்தகு - மையை இடுதற்கு ஏற்ற தகுதியுடைய; சுமங்கலத்தன்மையை உடைய என்றபடி.

மொய்த்தகொந் தளக பார
முகிழ்முலைத் தவள மேனி
மைத்தகு கருங்கட் செவ்வாய்
அணங்கினை வணங்கல் செய்வாம்.
(கம்பர்)

5. சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கம லாசனத்
தேவி, செஞ்சொல்
தார்தந்த என்மனத் தாமரை யாட்டி,
சரோருகமேல்
பார்தந்த நாதன் இசைதந்த ஆரணப்
பங்கயத்தாள்,
வார்தந்த சோதிஅம் போருகத் தானை
வணங்குதுமே.

6. பெருந்திரு வும்சய மங்கையும் ஆகிஎன்
பேதைநெஞ்சில்
இருந்தரு ளும்செஞ்சொல் வஞ்சியைப் போற்றின்எல்
லாஉயிர்க்கும்
பொருந்திய ஞானம் தரும்; இன்ப வேதப்
பொருளும்தரும்;
திருந்திய செல்வம் தரும்; அழி யாப்பெரும்
சீர் தருமே. (சரசுவதி அந்தாதி)

7. சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி
சிந்தைவைத் தியம்புவன் செய்யுட் கணியே.

---

5. சரோருகம் - தாமரை, பார் தந்த நாதன் - பிரம தேவன், அம்போருகத்தாளை - தாமரை போன்ற திருவடியை.

6. திரு - திருமகள், செஞ்சொல் வஞ்சி - செம் பொருளை உடைய சொல்மயமாக உள்ள பெண் தெய்வம்.

7. மெல் இயல் - மென்மையான இயல்பையுடைய, கிழத்தியாகிய மெல்லியல் என்றும் பொருள் கொள்ளலாம்.

8. தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே.

(தண்டியலங்காரம்)

9. என்னை உடையாள் கலைமடந்தை; எவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய அடித்தளிர்கள்—இன் அளிசூழ்
மென்மலர்க்கே தங்கும் எனஉரைப்பர்; மென்மையிலா
வன்மனத்தே தங்குமோ வந்து.

10. இமையவர்கள் மோலி இணைமலர்ந்தாள் சூடச்
சமயந் தொறும்நின்ற தையல், — சிமய
மலைமடந்தை, வாச மலர்மடந்தை, எண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்.

(தண்டியலங்கார உரை, மேற்கோள்.)

11. பொத்தகமும் ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்த கமண்டலமும் வன்னிகையும்—முத்து
வடம்கொண்ட பூண்முலையும் வந்தென் மனத்தே
இடம்கொண்டாள்; நீங்கிற் றிடர்.

(பாரத வெண்பா)

12. வெள்ளைக் கலைஉடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள், — வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

(காளமேகப் புலவர்)

---

8. தவளத் தாமரை - வெண்டாமரை.

9. அளி - வண்டு.

10. மோலி - மகுடம். சிமயம் - சிகரம்.

11. பொற்பளிங்கு – பொலிவு பெற்ற பளிங்கு. வன்னிகை-கிளி. வட மாகிய ஜபமாலை. பூண்முலையு மாகி என்று ஒரு சொல் வருவித்து முடிக்க.

12. கலை - ஆடை, அரியாசனம் - சிங்காதனம், சரி ஆசனம் - சமமான ஆசனத்தில்,

13. பூமாதும் சயமாதும் பொருந்தி வாழும்
        புயத்திருப்பத் தனித்துயரத் திருப்பேம் என்று
நாமாது கருதினள்போல் நயந்து சென்னி
        நாவகத்துள் இருப்பாளை நவிலு வாமே.
(கலிங்கத்துப் பரணி)

14. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்;
        வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை இன்பம் குலாவு கவிதை
        கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
        ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்,
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
        கருணை வாசகத் துட்பொருள் ஆவாள்.

15. வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போல அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம்
காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

16. தாமரைப் பூவினிலே — சுருதியைத்
        தனிஇருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே — கண்ணில் ஒற்றிப்
        புண்ணியம் எய்திடுவோம்.

---

13. சென்னி - சோழன்.
14. மாண் உயர்ந்து - பெருமை உயர்ந்து.
16. சுருதி - வேதம்.

17. கற்பனைத் தேன்இதழாள் — சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையினாள்;
சிற்பம் முதற்கலைகள் — பல
தேமலர்க் கரமெனத் திகழ்ந்திருப்பாள்;
சொற்படு நயமறிவாள் — இசை
தோய்ந்திடத் தொகுப்பதன் சுவைஅறிவார்
விற்பனத் தமிழ்ப்புலவோர் — அந்த
மேலவர் நாவெனும் மலர்ப்பதத்தாள்.
(பாரதியார்)

18. நாடிப் புலத்தை உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலேஉன் பாதம் அடைக்கலமே.
(தேசிக விநாயகம்பிள்ளை)

19. புத்தகத் துள்ளுறை மாதே,
பூவில் அமர்ந்துறை வாழ்வே,
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்,
வேதப் பொருளுக் கிறைவி,
எக்காலும் உன்னைத் தொழுவோம்;
எழுத்தறி புத்திபண் ணுவிப்பாய்;

20. நங்காய், நங்காய், நமோஸ்து !
ஞானக் கொழுந்தே, நமோஸ்து !
கல்விக் கரசி, நமோஸ்து !
கணக்கறி தேவி நமோஸ்து !
சொல்லும் பொருளே, நமோஸ்து !
சூட்சும ரூபி, நமோஸ்து ! (சரசுவதி சிந்தனை)

அமுத நிலையம்